விலை ரூபா 1.25

# ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 28 ஐப்பசி 1 ஸபர் 13 இதழ் 250

யாழ்ப்பாணம் சனிக்கிழமை 18-10-1986

சுவிற்சர்லாந்திலிருந்து

## இலங்கைத் தமிழ் அகதிகள் நாடுகடத்தப்படமாட்டார்கள்

-ஜீன் கவுண்டத்

சென்னை, ஒக். 17

'சுவிற்சலாந்திலுள்ள இலங்கைத் தமிழ் அகதிகளை அவர்களது தாயகத்திற்குத் திருப்பி அனுப்பும் யோசனை எமது அரசாங்கத்திற்கு இல்லை; ஐரோப்பிய சமூகத்தால் ஏற்படுத்தப்பட்ட சாசனத்தையடுத்து அவர்களைச் சுவிற்சாலாந்தில் வைத்திருப்பதென நாம் தீர்மானித்துள்ளோம். அவர்களை இலங்கைக்குத் திருப்பி அனுப்பும் யோசனை எமக்கு எவ்வகையிலும் இல்லை'

இவ்வாறு சென்னையில் கடந்த செவ்வாய்கிழமை பத்திரிகையாளர்களுக்குப் பேட்டியொன்றை அளித்த இந்தியாவிலுள்ள சுவிற்சலாந்து உயர்ஸ்தானிகர் ஜீன் கவுண்டத் உறுதியளித்துள்ளார்.

இந்த அகதிகளின் அந்தஸ்து பற்றியும் இவர்களை சுவிற்சர்லாந்து அரசாங்கம்

(5-ம் பக்கம் பார்க்க)

● குருநகரிலிருந்து இயந்திரப்படகில் உணவு ஏற்றிச்சென்ற

# 16 தமிழர் கடற்படையினரால் தாக்கப்பட்டுக் கொலை

### சடலங்கள் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை

(நமது நிருபர்)

**குருநகரிலிருந்து உணவுப் பொருட்களுடன் இயந்திரப் படகில் சென்ற 16 பொதுமக்கள் கடற்படையினரின் தாக்குதலுக்குப் பலியாகியுள்ளனர். இவர்கள் சென்ற இயந்திரப் படகில் இரத்தக்கறை படிந்த உணவுப் பொருள்களடங்கிய மூடைகளும், உடைகளும் மட்டுமே காணப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.**

கடந்த புதன் கிழமை இரவு இப் பயங்கரபடுகொலைச் சம்பவம் நிகழ்ந்தது.

குருநகரிலிருந்து 16 பேருடன் இந்த இயந்திரப் படகு புறப்பட்டது. இப்படகில்வெங்காய மூடைகளும் சாராயப் போத்தல்களும் இருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

நெடுந்தீவைச் சேர்ந்த ஒருவருக்கு இப்படகு சொந்தமானது.

இப்படகு புங்குடுதீவு தெற்குப்பகுதியை அணமித்துக் கொண்டிருந்த சமயம் பயங்கரவெடிச் சத்தங்கள் தொடர்ச்சியாகக் கேட்ட வண்ணமிருந்தன. அப்பகுதியில் வானளாவ பெரும் வெளிச்சம் காணப்பட்டதாகக் கூறப்படுகிறது.

நேற்றுமுன்தினம் அதிகாலை கடற்கரையில் மீன் பிடித்துக் கொண்டிருந்த ஒருவர் கடற்படையினரின் பணிப்பைத்

(5ம் பக்கம் பார்க்க)

கூட்டணி

### டிக்ஷிற்சந்திப்பு

சென்னை, ஒக் 17

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் சென்னையில் இந்தியத் தூதுவர் திரு. ஜே என். டிக்ஷிறறைச் சந்தித்து இலங்கையின் பொதுவான நிலைபற்றி பேசவுள்ள

(5-ம் பக்கம் பார்க்க)

கைதான சிப்பாய்கள் குறித்து

## கோட்டை முகாமுக்கு தொலைபேசித் தகவல்

லண்டன், அக்-17

"எமது கோரிக்கைகளை நிறைவேற்றினால் எம்மால் சிறைப் பிடித்து வைக்கப்பட்டிருக்கும் இரு இராணுவத்தினரையும் விடுதலைசெய்வோம்" என்று தம்மை இனங்காட்டிக் கொள்ளாத தொலைபேசித் தகவலொன்று கோட்டை இராணுவ முகாம் அதிகாரிக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளதாகப்

(5ம் பக்கம் பார்க்க)

## இலங்கை அரசின் ஐந்தாம் படையினர் சரணடைய வேண்டும்

### புலிகளின் யாழ். குடாநாட்டு தளபதி எச்சரிக்கை

யாழ்ப்பாணம், சனி

தமிழீழ விடுதலைப் போராட்டத்தை மழுங்கடிக்கும் வகையில் ஸ்ரீலங்கா அரசின் 5ம் படையினராக செயற்பட்டு துரோகச் செயல்களில் ஈடுபடுவோர் உடனடியாகச் சரணடையுமாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ் குடாநாட்டுத் தளபதி திரு. கிட்டு விடுத எச்சரிக்கை செய்துள்ளார்.

அவ் வேண்டுகோளில்

(5ம் பக்கம் பார்க்க)

## அரசு தெரிவிக்கும் ருசிகர தகவல் இதோ!

கொழும்பு வெள்ளி

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மன்னார் மாவட்ட தலைவர் விக்ரரதும் ஏனைய 24 தீவிரவாதிகளது சடலமும் மன்னார் பரப்புக்கடந்தானில் ராணுவத்தின் அனுமதியுடன் அடக்கம் செய்யப்பட்டதென இலங்கை அரசாங்கம் அறிவித்துள்ளதாக நேற்றுமாலை ரூபவாஹினி செய்தி தெரிவித்தது.

இச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

(5ம் பக்கம் பார்க்க)

இலங்கைத் தமிழர் பிரச்னை:

## பஞ்சாப் பிரச்னையிலிருந்து வேறுபட்டது -ராஜீவ்

சிட்னி ஒக். 17

'பஞ்சாப் பிரச்னைக்கும், இலங்கை இனப்பிரச்னையில் தமிழ் மக்களுக்கு இந்திய அரசு காட்டிவரும் ஆதரவுக்கும் எதுவித பொருத்தமுமில்லை. பஞ்சாப் பிரச்னை இலங்கைத் தமிழர் பிரச்னையிலிருந்து சகலவகைளிலும் மாறுபட்

(5ம் பக்கம் பார்க்க)

சென்னை-அமெரிக்க தூதரகம்முன்

## மாணவர், இலங்கை தமிழர் ஆர்ப்பாட்டம்

சென்னை ஒக் 17.

பாடசாலை மாணவர்களும், இலங்கைத்தமிழர்களும் கடந்த திங்கட்கிழமை சென்னையிலுள்ள அமெரிக்க தூதரகம்முன் ஆர்ப்பாட்டமொன்றை நடத்தினர்.

பயங்கரவாதத்தை ஒழிப்பது என்ற போர்வையில், இலங்கை அரசாங்கத்துக்கு அமெரிக்க வெளிவிவகாரத் திணைக்களம் இராணுவ உதவி வழங்கத் தீர்மானித்துள்ளதை ஆட்சேபித்தே இந்த ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்டது.

(கே)

**அறிவித்தல்**

டாக்டர் (திருமதி) எஸ். இராஜேஸ்வரன்

ஆகிய நான் 12-10-1986ல் இருந்து சென்றல் நேர்சிங் ஹோமைவிட்டு விலகிக் கொண்டேன் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

எனது வைத்திய சேவை தொடர்ந்தும் திருநெல்வேலி சந்திக்கருகாமையில் பலாலி வீதியில் உதவி அரசாங்க அதிபர் காரியாலயத்துக்கும், வைத்திலிங்கம் மரக்காலைக்கும் இடையில் அமைந்துள்ளது என்பதை நண்பர்களுக்கும் ஆதரவாளர்களுக்கும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

Dr. (Mrs) S. Rajeswaran

M. B. B. S. (Cey.)

The Medical Clinic,
Palaly Road,
Thirunelvely, North.

(C 5211)

"ஆஸ்பத்திரி ஊழியர் கோரிக்கை தீர்க்கப்படாவிட்டால்:

## உயிராபத்து ஏற்படுவது தவிர்க்கமுடியாதாகிவிடும்"

### ஊழியர் நடவடிக்கைக்குழு

யாழ்ப்பாணம், சனி

யாழ், வைத்தியசாலை ஊழியர்கள் தற்சமயம் மேற்கொண்டுவரும் நடவடிக்கைகளுக்கான காரணிகளைத் தீர்க்காவிட்டால், நோயாளாகளுக்கு மட்டுமன்றி ஊழியர்களுக்கும் உயிராபத்து ஏற்படுவது தவிர்க்க முடியாததொன்று.

யாழ். கோட்டை முகாமிலிருந்து தொடர்ச்சியாக ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்படுமேயானல் முழுவைத்தியசாலையுமே அழிக்கப்பட்டுவிடும்.

இவ்வாறு யாழ். அரசினர் ஆஸ்பத்திரி 'ஊழியர் நடவடிக்கைக்குழு' நேற்று கூட்டம் கூடிய பின் பத்திரிகைகளுக்கு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ் அரசினர் ஆஸ்பத்திரி மீது தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்கு

(5ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள Honda C D 70. [Brand New] உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு:- 38, பாரதி வீதி, கச்சேரியடி யாழ்ப்பாணம். (C 5266)

ஒலிப்பதிவு செய்யப்பட்ட கஸெட்-நல்லை ஆதீனம் முதலாவது குருமஹா சந்நிதானம் முன்னுரை சொல்ல, வாரியார் சுவாமிகள் கந்தரனுபூதி, சீர்பாதவகுப்பு பாடுகிறார். தொடர்ந்து சீர்காழி கந்த ஷஷ்டி கவசம் பாடுகிறார்- பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். [C5252]

Hoover Floor Polisher, Sanyo, Notional கசற் றேடியோக்கள், Speakers மின் விசிறிகள் Kenwood chef 7 attachment உடன், Singer தையல் மெஷின், Pyrex Dinner Set 59 Pieces, CrystalCutglass வகை, Johnson Dinner Sets, Sisil சிறியகுளிர் சாதனப் பெட்டி, Show case வகைகள், வெளிநாட்டிலிருந்து தருவிக்கப்பட்ட சாப்பாட்டு மேசை கதிரைகள், மின்விசிறிகள் உட்பட பலவிதமான பொருட்களும் விற்பனைக்குண்டு 326, பிரதான வீதி யாழ்ப்பாணம். [C 5238]

நல்ல நிலையிலுள்ள E N. தொடர் இலக்க ஒஸ்ரின் கேம்பிறிச் கார்விற்பனைக்குஉண்டு. தொடர்பு அ. பொ. இராசையா, கோண்டாவில்கிழக்கு கோண்டாவில். (C-5250

வட இந்தியா முறைப்படி தயாரிக்கப்பட்ட "மாங்காய் ஊறுகாய்", "வெள்ளைப்பூடு அச்சார்", "தேசிக்காய் ஊறுகாய்" மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்குண்டு M G M ,777,K.K S Road and 208, 1st Cross St. Jaffna. Telephone:22611. (C 5069)

மைசூர் அரிசி நம்பர் 1. கல்லில்லாதது. சுத்தமானது தரமானது, சுவையானதும் கூட. கைதேர்ந்த தொழிலாளர்களால் இயந்திரமூலம் சிறந்த முறையில் தயாரிக்கப்பட்டது உங்கள் சகல தேவைகளுக்கும் எங்கும் கிடைக்கும். மைசூர் அரிசியையே கேட்டுவாங்குங்கள். ஒருமுறை பாவித்தால் உண்மை விளங்கும். மைசூர் அரிசி ஆலை, புனித அன்னம்மாள் கோவில்வீதி, மானிப்பாய். [C-5042]

Sisil மற்றும் பல புதிய/பழைய குளிர்சாதனப்பெட்டிகள், Gas Electric Cooker, Akai Vedio Deck, Washing Machine, T. V.. பிள்ளைத் தொட்டில், Toaster, Kenwood Chief, காப்பெற்தெலஸ்கோப் சிறுபிள்ளைகள் படிக்கும் மேசைகள் Hall set, Deep Freezer, மற்றும் பல பொருட்கள் விற்பனைக்குண்டு. சி. பத்மநாதன், திருநெல்வேலி வடக்கு, [திருநெல்வேலி - சந்திக்கும், மருத்துவக்கல்லூரிக்கும் இடையில்] C 5197

## விற்பனைக்கு

நீரழிவு வியாதிகளுக்கு உகந்த வைத்தியர்களினால் சிபார்சு செய்யப்பட்ட கோதுமை அரிசி குறுணல் விற்பனைக்குண்டு. M G M, 777 K K. S. Road, and 208, 1-st Cross St:, Jaffna. ரெலிபோன்:22611 (C-5066)

1½ மாத பொமனேரின் ஆண் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. நிறம்: கறுப்பு, வெள்ளை. தொடர்பு கொள்ளவும். சேவ்ரிக்கும் வெங்கிக்கும் இடையில், இல: 50. 3ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். (C-5241)

வெளிநாடு செல்பவரின் சகல வீட்டுத் தளபாடங்கள், குளிர்சாதனப் பெட்டி, அல்மாரி, கட்டில் மெத்தைகள், கண்ணாடிமேசைகள், Box றேடியோக்கள், சசற் றேடியோக்கள், மின்விசிறிகள் Pyrex, கிளாஸ் வகைகள் Floor Polishers Kerwood Mixture சிங்கர், Zig zag தையல் மெஷின், Formica சாப்பாட்டு மேசை, Flasks, Toaster Blender வேலைப்பாடமைந்த தளபாடங்கள், மற்றும் பல விற்பனைக்குண்டு 326, பிரதான வீதி, யாழ்ப்பாணம். St. Charles பாடசாலையருகில். (C5237)

## 2-வது ஆண்டு நினைவஞ்சலி



அருந்தவராசா கனகதுரை

மலர்வு: 20-04-1964

உதிர்வு: 20-09-1984

ஆருத்துயரில் ஆழ்த்தி விட்டுப்பிரிந்த எமதன்புச் செல்வமே அருந்தவா. எம்மை விட்டு நீ பிரிந்தாலும் உன் இன் வதனம் என்றும் எம் நெஞ்சில் நிலைத்தே நிற்கும் உன் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:

அப்பா, அம்மா, அண்ணாமார், அக்காமார், தங்கை, அத்தான், மருமக்கள், பெரியப்பா குடும்பத்தினர், மற்றும் உற்றார், உறவினர்.

யோகபுரம், மல்லாவி. (C 5256)

## வகுப்புகள்

9 மாதகால டிப்ளோமா மனையியல் வகுப்புக்கள் கேக் ஐசிங், சமையற்கலை, தையற்கலை, பூவேலை, கைவேலை கோலம், கூந்தல் அலங்காரம், வர்ணம் தீட்டுதல், ஆங்கிலம். முதலுதவி வகுப்புக்கள் ஆரம்பம் 20 - 10 - 86 [திங்கள்] Ladie's Academy Regd), Victoria Road, Jaffna [C-5223]

## சேவை

தட்டச்சு இயந்திரங்கள் (Typewriters) சிறந்தமுறையில் திருத்திக் கொடுக்கப்படும். தொடர்பு: Fudo-Enterprises, 39/17. Power House Road, (3Rd Lane), Jaffna Branch: Jaffna Road, Manipay (Bitsman-Sivha Studio அருகாமையில்) [C 5244]


ஒரு வருட திறப்பு விழாவை முன்னிட்டு 12-02-1987 வரைக்கும் ஓடியோ றைக்கோடிங் சிறந்த முறையில் செய்து கொடுக்க 15/- அறவிடப்படும் என்பதை வாடிக்கையாளருக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம். பாபு தேவி வீடியோ சென்றர், 50, பிறவுன் வீதி, யாழ்ப்பாணம். (C 5267)

## தேவை

கடையில் வேலைசெய்வதற்கு இரு பையன்கள் தேவை வயது 18 வயதிற்குகுறைந்தவர்களாக இருக்கவேண்டும். அகதிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும். விலாசம்: ரதிவாச்வேக்ஸ், 44, கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம். (C 5254)

Morris Minor 1000-Model E N இற்கு மேற்பட்டது நல்ல நிலையில் உள்ள கார் தேவை தொடர்பு: யோசப் 13, புகையிரத வீதி, கோவில் வீதி, யாழ்ப்பாணம். T.P. 23580. (C 5264)

## விண்ணகவாழ்வின் 1-வது ஆண்டு நினைவஞ்சலி



இராயப்பு தோமாஸ்

(சின்னத்துரைச் சம்மாட்டியார்)

அன்னையின் மடியில்: 21-05-1922

ஆண்டவன் பறிப்பு: 18-10-1985

நீங்கள் எங்களைவிட்டு அகன்றாலும் உங்கள் நினைவு எங்களைவிட்டு அகலாது உங்கள் ஆத்மா சாந்தியடைய கடவுளைத் தினமும் பிரார்த்திக்கும்!

அன்பு மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

முனை கடற்கரைவீதி, பருத்தித்துறை. (C 4892)

# பொலிகண்டியில் மீன்பிடித்தோர்மீதுதாக்குதல்

வல்வெட்டித்துறை வெள்ளி பொலிகண்டி பகுதிக்கடலில் மீன்பிடித்துக்கொண்டிருந்த கடற்றொழிலாளர்களைத் தாக்கிய கடற்படையினர் 'ட்ரோலர்' களிலுள்ள வலைமடிகளை வெட்டி கடலில் வீசியதுடன் மீன்பிடிப்படகுகளிலிருந்த சுமார் 15 வெளியிணைப்பு இயந்திரங்களை தம்முடன் எடுத்துச்சென்றுள்ளனர்.

இச்சம்பவத்தினால் பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளர் மீன்பிடிப்படகுகளை ஒருவாறு வலித்துக்கொண்டுகரை வந்து சேர்ந்தனர்.

தமக்கு நேர்ந்த இன்னல்களைத் தமது பகுதி மீன்பிடியாளர் சங்கங்களுக்கு முறையிட்டதைத் தொடர்ந்து சங்கங்களின் தலைவர்கள் வல்வை மத்திய பிரஜைகள் குழுதலைவருடன் தொடர்பு கொண்டு கடற்படையினரின் இவ் அடாவடித்தனத்தையும் கொடூரமான செயல்களையும்கண்டித்து மீன்பிடி கடற்றொழில் அமைச்சருக்கும் பாதுகாப்பு அமைச்சுக்கும் அவசர தந்திகளை அனுப்பி வைத்துள்ளனர். (ஒ)

## பயிற்சி

வெளிநாடு செல்பவர்களுக்கான தொழில் பயிற்சி - Telex and I. D D. (Operators International (இருபாலரும்) Electricians- தகுதி வாய்ந்த சான்றிதழ் வழங்கப்படும். ஆரம்பம்: 22 - 10 - 1986 Electros Thirunelvely Junction C-5221

## 45-வது நாள் நினைவலைகள்

தமிழ் மண்ணுக்காய் தன்னுயிரைத் தியாகம் செய்த வீரன்

இராசரத்தினம் இரவீந்திரன்

வீரவேங்கை (குயிலன்)

மண்ணில் மலர்வு: 04-07-1964

கடலில் உதிர்வு: 03-09-1986

வீரத்திருமகனே! வேங்கையாய் நின்றவனே! ஊர்காக்கப் பிறந்த உத்தமனே எம் முயிரே! மூளாயும் அல்வாயும் முகிழ்ந்தெடுத்த முத்தமிழா! கார்காத்த மரபணித்த கண்மணியே இரவீந்திரா! தாராள மனமுடனே நாட்டுக்காய் நீ செல்ல சீராட்டிவளர்த்தளித்த வள்ளிநாயகி எம் 'வீரத்தாய்' வீரனினைச் சான்றோனாய் நாட்டுக்களித்தவனாய் இராசரத்தினம் உன் தந்தை. எம் மனதில் நிலைத்திடுவாய்.

ஊரவர், அல்வாய்-நாவலடி. [C-5258]

## 43-ம் நாள் நினைவஞ்சலி



கந்தசாமி பாஸ்கரி

மலர்வு: 22-10-62

உதிர்வு: 06-09-86

இரண்டுவருட இல்வாழ்க்கையிலே மழலை மாறு மகனை கரம்பிடித்த கணவன் கையில் அடைக்கலமெனக் கொடுத்துவிட்டு இவ்வுலகம்விட்டு நீந்தனையே. மணவறைக் கோலத்திலே வீற்றிருந்த நன்நாள் உனக்கு பிணஅறைக்கோலமானதோ? தாய், தந்தை, சகோதரர்கள், உற்றார், உறவினர், மற்றோரையும் மறந்து போகத்தான் மனம் வந்ததோ! உன்ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கும்!

கணவன் கந்தசாமி, மகன் சுமணன், தாய், தந்தை, சகோதரர்கள், உற்றார், உறவினர்.

ஏழாலை மேற்கு, ஏழாலை. (C 5233)


## இன்று யாழ் நகரில் மங்களகரமான ஆரம்பம்!



புதிய நிர்வாகத்தில் முற்றிலும் மறுசீர் அமைக்கப்பட்ட

கென்வூட் கோப்பி & கூல்பார்



அன்பர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள், அனைவரையும் அன்புடன் அழைக்கிறார்கள் 'கென்வூட்' ஸ்தாபனத்தார்.

# கென்வூட்

## கோப்பி & கூல்பார்

24, நவீனசந்தை, யாழ்ப்பாணம். [C5149]



## AVAILABLE FOR RENT

In the heart of Jaffna Town's Commercial Centre - Spacious Up-stairs 1600 sq. ft. Suitable for Medical Consultation Hall / Apartment, Laboratory Services, Audit / Accounts Office or Training Institute.

Apply:- Advt. No. A-2802, C/o Eelanadu, Jaffna.

(A-2802)

# ● பாலஸ்தீன இயக்கத்தால்—— இஸ்ரேல் குண்டுவீச்சு விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டது

பெய்ரூட், அக். 17

**தென் லெபனானில் பாலஸ்தீனிய நிலையங்கள்மீது குண்டுவீச்சு நடத்திய இஸ்ரேலிய போர் விமானங்களில் ஒன்று சுட்டுவீழ்த்தப்பட்டது. இதிலிருந்த விமானிகள் இருவர் கொல்லப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. நேற்றையதினம் இந்த சம்பவம் இடம்பெற்றது.**

தென் லெபனானின் சைடன் துறைமுகத்துக்கு அருகேயுள்ள பாலஸ்தீன நிலையங்கள் மீது இஸ்ரேலிய போர் விமானங்கள் குண்டு வீச்சுக்களை நேற்று ஆரம்பித்தன.

இதற்குப் பதிலடியாக பாலஸ்தீன விடுதலை இயக்கமும், லெபனான் படைப்பிரிவொன்றும் மேற்கொண்ட தாக்குதல்களையடுத்தே இஸ்ரேலிய போர்விமானமொன்று ஏவுகணை ஒன்றினால் சுட்டு வீழ்த்தப்பட்டது.

சுடப்பட்ட விமானத்தின் இரு விமானிகளும் 'பாரசூட்' டில் கீழே குதித்தபோது பாலஸ்தீன இயக்கத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

உலகச் செய்திகள்

ஆயினும் இஸ்ரேல் இதனை மறுத்துள்ளது மேற்படி விமானம் சுடப்பட்டதையடுத்து ஒன்றரைமணி நேரத்தில் அவ் விமானத்தின் விமானிகளில் ஒருவரை தனதுஹெலிகொப்டர் ஒன்று காப்பாற்றியதாக இஸ்ரேல் தெரிவித்தது அத்துடன், அவ் விமானத்திலிருந்த மற்றைய விமானி பாலஸ்தீனியர்களின் பிடியிலிருப்பதாகவும் அவரை மீட்கும் முயற்சிகள் இடம்பெறுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை இஸ்ரேல் மேற்கொண்ட குண்டுவீச்சில் 4 பாலஸ்தீனர்கள் நேற்றுக் கொல்லப்பட்டனர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

கடந்த செவ்வாய்க்கிழமை புதிதாக சேவையில் சேர்ந்துகொண்ட இஸ்ரேலிய இராணுவத்தினர் மீது பாலஸ்தீன இயக்கத்தினர் மேற்கொண்ட கைக்குண்டு வீச்சுக்குப் பதிலடியாகவே இஸ்ரேல் இந்த விமானக்குண்டுவீச்சை நடத்தியதாகத் தெரிவிக்கப்பட்டது

## இராமேஸ்வரத்திலுள்ள இலங்கை தமிழ் அகதிகளுக்கு குடியிருப்பு வசதிகள்!

சென்னை, அக் 17

இராமேஸ்வரம் மண்டபத்திலுள்ள இலங்கைத்தமிழ் அகதிகளுக்கு குடியிருப்பு வசதிகளை விரிவானமுறையில் ஏற்படுத்திக் கொடுக்க தமிழக அரசு முன்வந்துள்ளது.

இதற்கென ஒருகோடியே 90 லட்சம் ரூபா நிதிஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. வீடமைப்பு, குடிநீர், மின்சாரம் போன்றவற்றிற்கு இந்நிதி செலவிடப்படுமென்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக்குடியிருப்புத் திட்டத்தை மேற்கொள்ளவென ஒரு விசேட குழுவும் நியமிக்கப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட நிதியில் 25 லட்சம் ரூபா குடிநீர்த்திட்டத்துக்கெனவும் 5லட்சம் ரூபா மின் விநியோகத்திற்கெனவும் செலவிடப்படுமெனத் தெரிவிக்கப்பட்டது.

தமிழக முதலமைச்சரின் இலங்கைத் தமிழ் அகதிகள் புனர்வாழ்வு நிதியிலிருந்து இந்த குடியிருப்புத் திட்டத்துக்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

## அமெரிக்க—— அணுசக்தி பரிசோதனை எதிர்ப்பாளரால் தாமதம்!

வாஷிங்டன், அக் 17

அமெரிக்கா நேற்று மேற்கொண்ட அணுசக்திப் பரிசோதனை ஒன்று இப்பரிசோதனையின் எதிர்ப்பாளர் ஒருவரால் மேற்கொள்ளப்பட்ட குழப்பத்தையடுத்து 25 நிமிட நேரம் தாமதித்தது.

நெவாடா பாலைவனத்தில் நிலத்தடியின்கீழ் இப் பரிசோதனை நடத்தப்படுவதற்கு ஏற்பாடாயிருந்தது.

பரிசோதனைக்கான நேரம் அண்மித்ததும் அணுஆயுத எதிர்ப்பு இயக்கத்தைச் சேர்ந்த நபர் ஒருவர் நெவாடா பாலைவனத்தினுள் புகுந்து பரிசோதனை நடத்தப்படவிருந்த பகுதிவரை செல்ல முனைந்தார். அச்சமயம் பாதுகாப்பு அதிகாரிகள் அவரைப் பிடிக்க முனைந்தபோது குழப்பம் ஏற்பட்டது. இதனையடுத்து குறித்த நேரத்திலிருந்து 25 நிமிட நேரம் தாமதமாகவே அந்த அணுசக்திப் பரிசோதனை நடத்தப்பட்டது.

இதேவேளை சோவியத் யூனியன் இப்பரிசோதனையை வெகுவாகக் கண்டித்துள்ளது அண்மையில் இடம்பெற்ற 'ரெய்க்ஜாவிக்' சந்திப்பையும் உதாசீனம் செய்வதுபோலவே அமெரிக்கா இப்பரிசோதனையை நடத்தியுள்ளது என சோவியத் தெரிவித்துள்ளது.

## பங்களாதேஷ் ஜனாதிபதித் தேர்தலில் எர்ஷாத் பெரு வெற்றி

டாக்கா, அக் 17,

பங்களாதேஷ் ஜனாதிபதித் தேர்தலில் ஜெனரல் மொஹமட் எர்ஷாத் பெரும்பான்மை பலத்துடன் வெற்றி பெற்றுள்ளார்.

விரைவில் பாராளுமன்றத்தைக்கூட்டி தாம் ஜனாதிபதி ஆட்சியை ஏற்படுத்தப் போவதாக அவர் தமது வெற்றியையடுத்து அறிவித்துள்ளார்.

இதேவேளை நேற்று டாக்காவில் பிரதான எதிர்க்கட்சிகளின் பொதுக்கூட்டமொன்று இடம்பெற்றது. இக்கூட்டத்தில் உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர்கள ஜெனரல் எர்ஷாத்தை ஜனாதிபதி பதவியிலிருந்து இராஜினாமா செய்யும்படி கோரினார்கள். அத்துடன் நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தல் ஒரு பெரும் மோசடித்தேர்தல் எனவும் அவர்கள் குறிப்பிட்டனர்.

ஜெனரல் எர்ஷாத்திடம் இம் மோசடிக் குற்றச்சாட்டுப் பற்றி பத்திரிகையாளர்கள் வினவியபோது ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடாதவர்களே அத்தகைய குற்றச்சாட்டுகளைத் தெரிவிக்கின்றனரென்றும். போட்டியிட்டவர்கள் எத்தகைய குற்றச் சாட்டுக்களையும் முன்வைக்கவில்லை என்றார்.


# எம் டீ சோப் வழங்கும் தீபாவளி அதிர்ஷ்டம்

**10 நைலெக்ஸ் சேலைகளைப் பரிசாகப் பெறுங்கள்!**

பங்குபற்றும் முறை

உங்கள் முழுப்பெயர், விலாசம், வயது ஆகியவற்றுடன் உங்களது அல்லது உங்கள் பெற்றோர், அல்லது பாதுகாவலரின் அடையாள அட்டை இலக்கத்தையும் ஓர் 6 x 3 அங்குல அளவு வெள்ளைக் கடதாசியின் ஒரு பக்கத்திலும் நீங்கள் சவர்க்காரம் வாங்கிய கடையின் பெயர், விலாசம் ஆகியவற்றை மறுபக்கத்திலும் எழுதி அத்துடன்

5 எம் டீ சோப் மேலுறைகளையோ அல்லது 5 எம் டீ நீலசோப் மேலுறைகளையோ அல்லது ஒரு 'எம் டீ பார் சோப்' மேலுறை அல்லது இரண்டு எம் டீ அரைபார் சோப் மேலுறைகளை சேர்த்து அனுப்பவேண்டும்.

ஒருவர் எத்தனை விண்ணப்பங்கள் வேண்டுமானாலும் அனுப்பலாம்.

★ ஒவ்வொரு பரிசைப் பெறுபவரும் சவர்க்காரம் வாங்கிய கடைக்கு ரூபா 50/- பெறுமதியான பொருட்கள் இனாம்.

விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:

**எம் டீ என்ரபிறைஸ், தொழிற்பேட்டை, அச்சுவேலி.**

★ 28-10-86 பிற்பகல் 5-00 மணிக்குப் பின் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.




# எம் டீ சோப்




விலை ரூபா 2/-
மட்டுமே.

தரமான உள்ளூர் உற்பத்திகளை ஆதரியுங்கள்!

[A-745]


## இன்றைய பலன்

மாதம்- ஐப்பசி
திகதி- 1 (18-10-1986)
கிழமை- சனி
திதி- பிரதமை
நட்சத்திரம்- அச்சுவினி

மேடம்: மனக்கு பச்சல்களினால் வேதனைப்படுவீர்கள் சிறிய விஷ பயத்திற்கு மிடமுண்டு பிள்ளையொன்றின் உடல் நிலை கவலையைத் தரலாம்.

இடபம்: மேடைப் பேச்சாளர்கள் புகழ் அடைவர். வாழ்க்கையும் வளமாகும். குடும்ப சுகமுமுண்டு மகிழ்ச்சிகரமான தினம்.

மிதுனம்: சகோதர மனச் சஞ்சலமுண்டு எதிலும் மன சக்தி தோன்றும். அமைதியும் குலையும்.

கடகம்: தாய்வழிப் பெருமையுண்டு. தன்தொழில் விருத்தியுண்டு. தன்மான மிகுதியும் உண்டாம்.

சிங்கம்: சமூகத்தில் மதிப் புயரும் எதையும் வெற்றியுடன் சாதிப்பீர்கள். அதிர்ஷ்டவாடங்களுக்கும் இடமுண்டாம்.

கன்னி: பின்னனியில் பிளவுக்கு இடமுண்டு. கடன் படவும் நேரிடும் இடைக்காலப்பிளவுக்கு மிடமுண்டு.

துலாம்: இலட்சியவாதிகள் பூரிப்படைவார்கள் உற்சாகமாக நாளைக் கழிப்பீர்கள். எதிலும் சாதகமான சூழ்நிலை தென்படும்.

விருச்சிகம்: உற்சாகம் குன்றும். அதிக முதலீட்டைத் தவிர்க்கவும் காதல் கணை தாக்கும். எதையும் பொறுமையுடன் சாதிக்கவும்.

[6ம் பக்கம் பார்க்க]

## மணிவாக்கு

உள்ளம் உடைமை உடைமை பொருளுடைமை
நில்லாது நீங்கி விடும்.

—குறள்

# நமது நோக்கு

## பங்களாதேஷின் தேர்தல் முடிவு

மக்கள் ஆட்சியைப் பற்றிக் கூறப்பட்ட கருத்துக்களில் சேர் வின்ஸ்டன் சேர்ச்சிலின் கூற்று மிக அலங்காரமானது. ஆழமானதுங்கூட.

"உலக வரலாற்றில் காணப்பட்ட ஆட்சிமுறைகள் பல; அவை அனைத்தையும் உதவாதென்ற நிலையில் நாம் காணும் ஜனநாயக ஆட்சிமுறை மிக மோசமானதென்றே கொள்ள வேண்டும்".

தமக்குரித்தான ஆங்கில பாணியில் வெளியிட்ட இக்கருத்து ஆபிரகாம் லிங்கன் ஜனநாயகத்துக்கு அளித்த வரைவிலக்கணத்தைத் தழுவிநிற்பது சிந்தனைக்குரியது.

ஆட்சியைக் கைப்பற்ற முடியுமானால், உலக வீரர்களில் ஒருவரெனக் கருதப்படும் வின்ஸ்டன் சேர்ச்சில் தாம் தலைமை தாங்கும் கட்சியை இலகுவில் அசைக்க முடியாத அளவு மக்கள் ஆதரவைத் திரட்டவல்ல அபாரமான ஆளுமையுடையவர்.

எத்தகை வீரமும் ஜனநாயக உணர்வுமிருந்தபோதும், இரண்டாம்உலக யுத்த முடிவில், வெற்றி கண்ட பிரிட்டன், அதற்குப் பெரும்பங்களித்த பிரதமர் சேர்ச்சிலை பொதுத்தேர்தலில் நிராகரித்தது.

அந்தத் தோல்வியால் விரக்தி ஏற்பட்டபோதும், மக்கள் தீர்ப்பை புரிந்துகொண்டமையால் மீண்டும் ஆட்சிக்குத் தலைமை தாங்க முடிந்தது.

மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றும் ஆற்றல் ஜனநாயகத்துக்கே உண்டென்பதையும், அதில் ஏற்படும் சிக்கல்கள் மிக மோசமானவை என்பதையும் விளக்குவதே மூதறிஞர் சேர்ச்சில் ஜனநாயகத்துக்கு அளித்த வியாக்கியானம்.

இவ்வித ஆட்சிமுறைக்கு உண்டான இடர்களை நாம் உலகநாடுகளில் காணமுடிகிறது. குறிப்பாக இந்தியாவிலிருந்து பிரிந்த பாகிஸ்தானிலும், அதிலிருந்து பிரிந்த பங்களாதேஷிலும் நடந்தேறிய பொதுத் தேர்தல்கள் இதற்குச் சான்றாகும்.

பல தடவைகள் பின்போடப்பட்ட பங்களாதேஷின் பொதுத்தேர்தல் திருவாரூர் தேர்போல இறுதியில் இருப்பிடம் வந்து சேர்ந்தது. ஆனால் திருவிழா சிறப்பாக நடைபெற்றதா?

பங்களாதேஷை நினைக்கும் போதெல்லாம் வங்கத் தந்தை என்று சொல்லப்படும் முஜிபுர் ரஹ்மானின் நினைவுவரும்.

அவருடைய தலைமையில் பங்களாதேஷ் சுதந்திர நாடாகத் திகழ வேண்டுமென்றநோக்குடன் இந்திரா காந்தி எடுத்த நடவடிக்கைகள் இன்று எங்குபோய் முடிந்திருக்கிறது.

இதுதான் துரதிர்ஷ்டத்துக்குளான இந்தநாட்டின் கதியென்று சொல்வதற்கில்லை.

சதிப்புரட்சிகள் இரண்டில் கொலைசெய்யப்பட்ட ஜனாதிபதிகள் இருவரின்-முஜிபுர்ரஹ்மான், ஸியாவுர் ரஹ்மான் - முறையே புதல்வியும் விதவைமனைவியும் இன்றைய தேர்தலை எதிர்க்கும் எதிர்க்கட்சிகளின் தலைவர்களென்றால் சதிகளும், அவை ஏற்படுத்தும் அரசியல் நெருக்கடியை பயன்படுத்திவரும் மாஷல்லோ ஜனாதிபதிகளும் நாடு ஜனநாயக ஆட்சி காண்பதற்கு உகந்தவர்களல்ல என்பது புலப்படும்.

இவ்விரு பெண் மணிகளும் பழிக்குப் பழிவாங்கும் நோக்குடன் எதிர்ப்பியக்கம்தொடங்கினதாக மக்கள் கருதவில்லை. இதேபோன்ற சூழ்நிலை செல்வி பெனாசிர் பூட்டோவுக்கு பாகிஸ்தானில் இருந்து வருகிறது.

காரணம் ஒன்றுதான்; நாட்டில் அராஜகம் பரவாமல், ராணுவ உதவியுடன் ஆட்சியைச சீர்படுத்தவல்ல ஜனாதிபதி எவரும் இலகுவில் மக்கள் ஆட்சிக்கு இடமளிக்கார்.

பங்களாதேஷில் நடந்தேறியதும் இதுவே. எர்ஷாட்டின் ராணுவ ஆட்சி திருப்தியற்றதென்பதை அங்கு நடைபெற்ற ஹர்த்தால்கள், குழப்பங்கள், கலவரங்கள் விளக்குகின்றன.

பேராதரவு பெற்றுவரும் 15 கட்சிகள் கூட்டணியும், ஏழுகட்சிகள் கூட்டணியும் இன்று நடந்தேறிய தேர்தலில் பங்குபற்ற மறுத்துவிட்டன. நாடுமுழுவதும் அதனைப் பகிஷ்கரிக்கவேண்டுமென்று அவை கோரியிருந்தன. மக்கள் வாக்குப் பதிவு மிகக்குறைவாயிருந்ததென்று கூறப்படுகிறது. ராணுவ ஆட்சியில் அமர்ந்திருபபவரே தேர்தலை நடத்துவதால் அவரது செல்வாக்கையே தேர்தல் முடிவு காட்டுமென்பதில் ஐயமில்லை.

ராணுவ ஆட்சி முடிவடையவேண்டுமானால் ஜனாதிபதி எர்ஷாட் எதிர்க்கட்சிகள் கேட்டபடி பதவியிலிருந்து விலகி தற்காலிகமாக ஒரு பொதுநிர்வாகத்தை அமைத்திருக்க வேண்டும்.

இதுகாறும் பதவியிலிருந்து நடத்திய ஆட்சியை நீதிப்படுத்தவும், அப்பதவியில் தொடர்வதற்கும் இன்று நடைபெற்ற தேர்தல் இன்றியமையாததென்பது எவரும் அறிந்த உண்மை.

நாடு அமைதி வாழ்வைக் காணும் வாய்ப்பு இன்றும் எட்டத்திலிருப்பதுதெளிவு.

## செந்தில்கதிர்வேல் விழாசபைக்கூட்டம்

யாழ்ப்பாணம், சனி

யாழ் செந்தில் கதிர்வேல் விழாச்சபையின் மூன்றாவது கூட்டம் நாளை காலை நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் கிளிநொச்சி அரசாங்க அதிபர் திரு. ஜெகா செந்தில்நாதன் தலைமையில் நடைபெறவுள்ளது. (எ)

### றெட்பாணு, போரூட் நிறுவனங்கள்

## சத்துணவு குறைநிவர்த்தி நிலையங்கள்மூலம் ஆற்றும் பணிகள்

பாதுகாப்பு கடல்வலயப் பிரகடனத்தால் பாதிக்கப்பட்ட கடற்தொழிலாளருக்கு நோர்வே நாட்டைச் சேர்ந்த றெட்பாணுவும் (குழந்தைகள் பராமரிப்பு நிறுவனம்) போரூட்டும் இணைந்து தொடங்கிய நிவாரணப் பணியில் 18 000 குடும்பங்களுக்கு 1985-ம் ஆண்டு மாசி, பங்குனி, சித்திரை மாதங்களில் உணவுப் பொட்டலங்கள் வழங்கப்பட்டன யாழ். குடாநாட்டின் சூழ்நிலை மேலும் பாதிக்கப்பட்டதால் உணவுப்பொட்டலம் வழங்கலில் மாற்றம் செய்யப்பட்டது.

தமிழ் பிரதேசங்களில் உருவாகியிருக்கும் போர நிலையின் காரணமாக உணவுப் பற்றாக்குறையும், தட்டுப்பாடும் ஏற்பட்டுள்ளது. இதனால் மிகவும் பாதிக்கப்படுபவர்கள் சிறுர்களும், கர்ப்பிணிகளும் பாலூட்டும் தாய்மார்களுமேயாவர். குழந்தைகளுடைய மூளை உடல் உள வளர்ச்சி அவர்கள் 5 வயதுக்குள் பெறும் போஷாக்குணவிலேயே தங்கியுள்ளது. குழந்தைகளுக்குரிய போஷாக்குணவை ஒரு நாளாது பிற்போடுவது மிகவும் பாரதூரமான தவறாகும். ஆகவே போஷாக்கு மந்தநிலையில் இருக்கும். இம்மூன்று பகுதியினருக்கும் போஷாக்கு வழங்குவதை முக்கிய குறிக்கோளாகக் கொண்டு FRSS நிறுவனம் சத்துணவுக் குறை நிவர்த்தி நிலையங்களை 85-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் நெடுந்தீவிலிருந்து பருத்தித்துறைவரை பரவலாக கடற்கரைப் பிரதேசத்தில் அமைந்தது.

இச்சத்துணவு குறை நிவர்த்தி நிலையங்களில் பால், இலைக்கஞ்சி, சேர்வைமா, சளி, சூப் பயறு போன்ற சத்துணவுகளை நாளாந்தம் வழங்கி சிறுர்களினதும் தாய்மார்களினதும் ஆரோக்கியத்தை கட்டியெழுப்பும் பணியில் சேவையாற்றியுள்ளது.

பின்னர் கடற்கரைப் பகுதியில் வெற்றிலைக்கேணி வரையும் மற்றும் உள்ளூர்ப் பகுதிகளிலும் இச்சேவை விஸ்தரிக்கபபட்டது. இதுவரை 80 நிலையங்களை அமைந்து 7000 க்கு மேற்பட்ட சிறுர்களும் தாய்மார்களும் பயனடைந்துள்ளனர்.

இச்சேவை தொடர்பாக 200 மேற்பட்ட தொண்டர்களுக்கு பயிற்சியளிக்கப்பட்ட பின், தாய்மார்களின் ஒத்துழைப்புடன் இவர்கள் நிலையங்கள் நடாத்தப்படுகின்றன. இதுமட்டுமல்லாது FRSS நிறுவனம் பின் குறிப்பிடப்பட்டுள்ள சேவைகளிலும் ஈடுபட்டுள்ளது.

காரைநகரில் கடற்படை விஸ்தரிப்பில் வீடுகளை இழந்தவர்களுக்கு 50 வீடுகள் அமைப்பதற்கு உதவுதல்.

கடற்தொழிலாளருக்கு மீன்பிடி உபகரணங்கள் போரூட்டால் வழங்குதல்.

கடந்த வருடம் இடம்பெயர்ந்த 1000க்கு மேற்பட்ட குடும்பங்களுக்கு சிலவார காலங்களுக்கு அரிசி, பருப்பு, பால்மா, பணம் என்பவை வழங்குதல்.

றெட்பாணு நிறுவனம் 2000 அகதி குடும்பங்களுக்கு அரசாங்க அதிபர்களின் அதிபர்களின் மூலம் உடுபுடவை பொட்டலங்கள வழங்குதல்.

கல்வி இலாவினல் வழங்கப்படும் போஷாக்கு பிஸ்கட் (CARE) ஆறு மாத காலமாக வழங்கப்படாமலிருந்த வேளை கப்பல் மார்க்கமாக றெட்பாணுவின் செலவில் இதைக் குடாநாட்டிற்குத் தருவித்துப் பள்ளிச் சிறுர்களுக்கு வழங்குதல்

இவை தவிர கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவனியா, போன்ற மாவட்டங்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கு (குழந்தைகள் பாதுகாப்பு நிதியம் (SEF - UK) றெட்பாணு ஸ்தாபனங்கள் போஷாக்கு. உடுபுடவை மருந்து வகைகள் போன்ற பொருள்களை வழங்கியதுடன் விவசாய உதவியும் அளிக்கப்பட்டுள்ளது.

இதில் அங்கம் வகிக்கும் SEF ஸ்தாபனத்தார் யாழ் ஆஸ்பத்திரிக்கு வழங்கிய உதவிகள் எல்லோருக்கும் தெரிந்ததே.

றெட்பாணு ஸ்தாபனம் இலங்கையில் முதல் முதலாக 1974ம் ஆண்டு "சீநோர்" நிறுவனத்திற்கு அருகாமையில் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவை ஆரம்பித்து தொடங்கிய சேவை தமிழ்ப் பிரதேசங்கள் உட்பட பல பாரிய திட்டங்களில் ஈடுபட்டமை எல்லோரும் அறிந்ததேயாகும்.

சமுதாய அடிநிலை வகுப்பிலுள்ள குழந்தைகளின் நலன் கருதி அமைக்கப்பட்ட சுயேச்சை தொண்டர் ஸ்தாபனமாகிய றெட்பாணுவின் யாழ். குடாநாட்டுப்பிரதிநிதி திரு. எஸ் சோதிராசா FRSS நிறுவனம் உருவாகுவதற்கும், திட்டங்களை வகுத்து அமுலாக்குவதற்கும் காரணமாக இருந்து இக்குழுவின் தலைவராகக் கடந்த ஒரு வருடத்திற்கு மேல் பணியாற்றி வருகிறார். இக்குழுவில் திருமதி சகைலாசபதி SCF - UK பிரதி நிதியும், திருவாளர் சுப்பிரமணியம் போரூட் பிரதிநிதியும் சேவையாற்றுவது குறிப்பிடத்தக்கதாகும்.

இச்சிறுர்களுடைய திட்டத்திற்கு குழந்தைகள் பாதுகாப்பு நிதியத்தின் சுகாதார ஆலோசகர் செல்வி கிலேயர் டவ் அவர்களும், பேராசிரியர் D. ராமதாஸ் அவர்களும் ஆலோசனைகள் வழங்கிவருகிறுர்கள்.

இந்த நிவாரணப்பணியில் பலரும் தகுந்த நேரத்தில் பலனைப்பெறுவதற்கு இதில் சேவை செய்யும் சகல உத்தியோகத்தர்களதும், வெளிக்கள நிவாரண உத்தியோகத்தர்களதும் மேற்பார்வையாளர்கள், சேவையாளர்களதும் (சுகாதாரத் தொண்டர்) மற்றும் பொது மக்கள் அமைப்புகளதும் சுகாதார இலாகா உத்தியோகத்தர்களதும் கடுமையான உழைப்பும் தான் முக்கிய காரணம் எனத் தலைவர் நன்றி தெரிவித்துள்ளார். (ப)

### 500க்கு மேற்பட்ட யாழ். செயலக

## ஊழியர் இரு மணித்தியால வெளிநடப்புப் போராட்டம்

யாழ்ப்பாணம், சனி

யாழ். செயலகம், பெரியாஸ்பத்திரி ஆகியவற்றின் மீது யாழ் கோட்டை இராணுவ முகாமிலிருந்து ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதை ஆட்சேபித்தும். இனிமேல் இவைமீது ஷெல் தாக்குதல் மேற்கொள்ளக்கூடாது என்பதனை வலியுறுத்தியும் யாழ். செயலகத்துக்கு முன்பாக சகல திணைக்களங்களையும் சேர்ந்த சுமார் 500 ஊழியர்கள் நேற்று முன் தினம் வெளிநடப்பு போராட்டம் நடத்தினர்.

காலை 10 மணிக்குத் தமது காரியாலயங்களைவிட்டு வெளியேறிய ஆண், பெண் சகல ஊழியர்களும் செயலகத்தின் முன்புறவாசலுக்கு வந்து கூடிநின்று போராட்டத்தில் ஈடுபட்டனர்.

யாழ். அரசாங்க அதிபர் மட்டுமே செயலகத்தில் இருந்தார் ஏனைய திணைக்களப் பிரிவுகளைச் சேர்ந்த உயர் அதிகாரிகளும், ஊழியர்களும் செயலக வாசலில் கூடிநின்று போராட்டத்தில் கலந்து கொண்டனர்.

சிவில் நிர்வாகமா? அல்லது இராணுவ நிர்வாகமா? இராணுவமே வெளியேறு! ஆஸ்பததிரியும் அலுவலகங்களும் யுத்தக்களங்களா? நோய்க்கு மருந்து ஷெல்குண்டா?, கோட்டையை வாபஸ்பெறு!, என்பன போன்ற சுலோகஅட்டைகளை ஊழியர்கள் கைகளில் ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இப் போராட்டத்தில்யாழ். செயலகத்தைச் சேர்ந்த ஊழியர்கள். தேசிய வீடமைப்புத் திணைக்கள ஊழியர்கள், டனை அபிவிருத்திச் சபை, உள்ளூராட்சி திணைக்களம், காட்டுத்திணைக்களம், விலை மதிப்பு திணைக்களம், தேசிய இளைஞர் சேவை மன்றம், தேசிய அபிவிருத்தி அதிகாரசபை, பிரதேச அபிவிருத்தி அலுவலகம், தேர்தல் காரியாலயம், நில அளவை, விவசாயத் திணைக்களம், குடியகல்வு குடிவரவு திணைக்களம். காணிப் பதிவகம், காணி சீர்திருத்த ஆணைக்குழு சிறுகைத்தொழில் திணைக்களம், புடவைகைத்தொழில், சமூக சேவைக் கிராமிய அபிவிருத்தி, அடையாள அட்டைக்காரியாலயம், புள்ளிவிபரக் கந்தோர் விலைக்கட்டுப்பாட்டு திணைக்களம். ஓய்வூதியக்கிளை. பிறப்பு இறப்பு

[5ம் பக்கம் பார்க்க]

### வல்வை முகாமருகில் இருந்த

## சிலிண்டர் குண்டை இராணுவத்தினர் செயலிழக்கச் செய்தனர்

வல்வெட்டித்துறை, வெள்ளி

வல்வை இராணுவ முகாமின் அண்மைப் பகுதியில் புலிகளினால் வைக்கப்பட்டிருந்த சிலிண்டர் குண்டினை வல்வை ராணுவத்தினர் கண்டு பிடித்து அதனைச் செயலிழக்கச் செய்ததுடன் அப்பகுதியிலிருந்த ஆட்களற்ற வீட்டையும் மில் ஒன்றையும் அதன் யந்திரங்களையும் குண்டு வைத்து தகர்த்தனர்.

இதனைத் தொடர்ந்து தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும்தடந்த நேரடித் துப்பாக்கிச் சமரில் ஒரு இராணுவ சிப்பாய் பலியானதாகவும் குறைந்தது ஐந்து பேர் காயமடைந்தனர் எனவும் புலிகளின் அறிக்கை தெரிவிக்கிறது.

கடற்படைப் பீரங்கிக் கப்பலிலிருந்தும் பீரங்கிக் குண்டுகள் கரையை நோக்கி அடிக்கப்பட்டன. தொடர்ந்தும் கடற்படைப் பீரங்கிக் கப்பலிலிருந்து தொண்டமானாறு கரையோரப் பகுதிகளிலும் பீரங்கிக் குண்டுகள் அடிக்கப் பட்டன. [ஒ]

## தவறிவிட்டது

மரியாம்பிள்ளை கிங்ஸ்லி வில்பிறட் என்பவரின் வாகனச் சாரதி லைசென்ஸ் கச்சேரிக்கு அண்மையில் தொலைந்துவிட்டது. இதன் லைசென்ஸ் இலக்கம் D. L. 296406 கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ஈழநாடு பாதுகாப்பு உத்தியோகத்தரிடம் ஒப்படைக்கவும். [C-5274]

## கவின் கலை அரங்கு

யாழ்ப்பாணம் சனி

தமிழர் கலாசார அவையின் கவின்கலை அரங்க நிகழ்ச்சிகள் நாளை ஞாயிறு பிற்பகல் வின்சர் கலை அரங்கில் நடைபெறவுள்ளன.

வயலின் இசை, கவியரங்கு, இசையரங்கு ஆகியன இடம்பெறவுள்ளன. (மா)

## கைதான...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பி.பி.ஸி. அறிவித்தது.

இதே வேளை கோரிக்கைகள் என்ன என்பது பற்றியோ தொடர்பு கொண்டவர் யார் என்பவர் பற்றியோ எவ்வித் தகவலும் தெரிவிக்கபடவில்லையாம். ஆனாலும் அன்று ஒன்பது சடலங்கள் முகாமில் கையளிப்பது தொடர்பாக தொடர்பு கொண்ட குரலே மீண்டும் இவ்விடயம் குறித்தும் பேசியதாம். [எ]

## ஊழியர் இரு

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

சந்தோ, நிதிக்கிளை, திட்டமிடல், மாவட்டசபை, பரிபாலன கிளை, ஆகிய திணைக்களங்களையும் சேர்ந்த ஊழியர்கள் உணர்வு பூர்வமாகக் கலந்து கொண்டனர்.

நண்பகல் 12 மணிக்கு போராட்டம் முடித்து வைக்கப்பட்டது.

திரு. எஸ் கணேஸ் சகல ஊழியர்களுக்கும் மத்தியில் உரையாற்றினர். அவர் தமது உரையின் போது, "இன்று போல நாம் எல்லோரும் ஒற்றுமையாக எமது கோரிக்கைகளை வென்றெடுப்பதற்குப் போராட வேண்டும் அப்போது வெற்றி நிச்சயம் கிடைக்கும்" என்றார்.

நலன்புரிச்சபைச் செயலாளர் திரு வி எஸ் கனகரத்தினம் யழ் அரச அதிபருக்கூடாக ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கின்ற மகஜரை ஊழியர்களுக்கு வாசித்துக்காட்டினார். சகல ஊழியர்களும் மகஜரை ஏகமனதாக ஏற்றுக் கொண்டனர்.

தொடர்ந்து ஊழியர்கள் தத்தமது காரியாலயங்களுக்குச் சென்று கடமையிலீடுபட்டனர் (ச-கே)

புதிய வெளியீடு
**வெலிங்டன்**
10-30, 2-30, 4-30, 6-30
பழிக்குப்பழி வாங்கும், திகிலூட்டும் . சண்டைகள் நிறைந்த
MAD MAX BEYOND THUNDER DOME
Sex Action
[Adults Only]

**லிடோ**
தினசரி காலை 10-30, மாலை 2-30, 6-30
பிரபு – நளினி நடித்த
3-வது வெற்றி வாரம்
புதிய வெளியீடு
கனர்
**நியாயம்**

அரசஊழியர் அலவன்ஸ்

# வடபகுதி ஊழியருக்கு 50 சதவீத வெட்டு!

ஒட்டுசுட்டான் வெள் அரசாங்க இலாகாக்களின் உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டு வந்த அலவன்ஸ் கொடுப்பனவுகளில் வடபகுதி உத்தியோகத்தர்களுக்கு 50சதவீதம் வரை வெட்டப்பட்டே கொடுப்பனவு செய்யப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக வடபகுதியில் பொருட்களின் விலை அதிகரிப்பால் வாழ்க்கைச் செலவும் அதிகரித்திருக்கும் இவ்வேளை அலவன்ஸ் கொடுப்பனவுகளை குறைத்ததினால் பல உத்தியோகத்தர்கள் பாதிப்படைந்துள்ளனர். [ஒ]

## இன்றும் நாளையும் இசைநடனநாடக போட்டிகள்

யாழ்ப்பாணம், சனி

யாழ். மாவட்டப்பாடசாலைகளுக்கிடையிலான இசை, நடன, நாடகப்போட்டிகள் இன்று 18ந் திகதியும், நாளை 19ந் திகதியும் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

போட்டிகளை யாழ்: கல்விப் பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் ஆரம்பித்துவைப்பார். பிரதம கல்வி அதிகாரி திரு. வி. தங்கராசா தலைமையில் போட்டிகள் நடைபெறும்.

18ந்திகதி இசை, சங்கீதம், வரலாற்று, சமூக நாடகப் போட்டிகளும், 19ந்திகதி நடனம், நாட்டியநாடகம் ஆகிய போட்டிகளும் நடைபெறும். (ச)

## ஆஸ்பத்திரி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தல்களுக்கு எதிராக வைத்தியசாலை ஊழியர்களால் தற்போது எடுக்கப்பட்டுவரும் நடவடிக்கைகளால் நோயாளருக்கு ஏற்பட்டுள்ள அசௌகரியங்களுக்காக நடவடிக்கைக் குழு கவலையை வெளிப்படுத்துகிறோம்.

தற்போதைய சூழ்நிலையில் ஏற்பட்டுள்ள வசதியீனங்களை சகித்துக்கொள்ளுமாறு எல்லா நோயாளர்களையும் கேட்டுக்கொள்வதுடன் அவசர சிகிச்சைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதையும் அறியத் தருகிறோம்.

எதிர்வரும் திங்கட்கிழமை (நாளை மறுதினம்) தற்போதைய ஆஸ்பத்திரி ஊழியரின் நடவடிக்கை பற்றி மீளாய்வு செய்யப்படும் எனவும் தெரிவிக்கிறோம். (ச)

## சுவிற்சர்...,

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கைக்குத் திருப்பி அனுப்புவதற்கு நடவடிக்கையெடுக்குமா எனவும் பத்திரிகையாளர்கள் கேட்ட கேள்விக்குப் மேற்கண்டவாறு பதிலளித்த சவுண்டக் தனதுநாட்டில் இதுவரை 3000 இலங்கைத் தமிழ் அகதிகள் உள்ளனரெனத் தெரிவித்தார் இந்த அகதிகள் பற்றி மேலும் கூறியதாவது:-

இவர்கள் பேர்ளினுக்கூடாக சுவிஸ் வந்து சேர்ந்துள்ளனர். சகல நாட்டு அகதிகளும் ஐரோப்பிய நாடுகளுக்குள் நுழைவதற்கு வழமையாக பேர்லின் பாதையையே பாவிப்பதாகச் சுட்டிக் காட்டிய சவுண்டத் ஆரம்பத்தில் இவர்கள் எல்லைப் புறங்களிலுள்ள நகரங்களிலேயே பிரவேசித்துள்ளனரெனச் சொன்னார்.

அடிக்கடி அரசியல்வாதிகள் இந்த அகதிகள் பிரச்னை பற்றி எழுப்பியபோதிலும் இவர்கள் அங்கிருந்து நாடுகடத்தப்படமாட்டார்கள் வெளிநாடுகளிலிருந்து சுவிற்சலாந்துக்கு சென்றுள்ள 10 லட்சம் அகதிகளில் இலங்கைத் தமிழ் அகதிகளும் ஒருபகுதியினராவர். [கே]

# ஜனாதிபதியின் விருப்பம்பற்றி டிக்ஷிற் தகவல்

சென்னை, ஒக். 17

இலங்கை அரசாங்கத்துக்கும் தமிழ்க் குழுக்களுக்குமிடையில் மீண்டும் பேச்சுவார்த்தைகளை விரைவில் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு ஜனாதிபதி ஜயவர்த்தன இந்தியாவைக் கேட்டுள்ளாரென இந்திய உயர் ஸ்தானிகர் திரு. ஜே. என். டிக்ஷிற் சென்னையில் தெரிவித்தார்.

இந்திய செய்தி ஸ்தாபனமொன்றுக்குப் பேட்டியளித்த திரு. டிக்ஷிற் மேலும் தெரிவித்துள்ளதாவது:

இலங்கை இனப்பிரச்னைத் தீர்வுக்கு இந்தியா தனது நற்பணியை ஆரம்பிக்க வேண்டுமென ஜனாதிபதி ஜயவர்த்தன விரும்புகிறார். இந்தியா விரும்பும் இடத்தில் நேரத்தில் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கத் தான் தயாராக இருப்பதாகவும் அவர் கூறியுள்ளார் இவ்வாறு டிக்ஷித் கூறியுள்ளார். (கே)

அம்பாறை மாவட்டத்தில்:

# இனந்தெரியாதகோஷ்டியால் தமிழ்க் குடும்பம் கடத்தல்

மட்டக்களப்பு, வெள்ளி

அம்பாறை மாவட்டத்தில் மல்வத்தை கிராமப்பகுதியில் ஆறு பேரைக்கொண்ட தமிழ் குடும்பமொன்று துப்பாக்கி முனையில் கடத்தப்பட்டுள்ளது

கடந்த புதன்கிழமை நள்ளிரவு சுமார் 30பேர்கொண்ட ஆயுதபாணிகளான கோஷ்டி ஒன்று லொறிஒன்றில் வந்து இக்குடும்பத்தை பலவந்தமாக கடத்திச்சென்றதாயும் அருகிலிருந்த மூன்று வீடுகளையும் ஒரு கடையையும் உடைத்துச் சேதமாக்கியுள்ளதாகவும் கூறப்படுகிறது.

இச்சம்பவத்தில் கடத்தப்பட்ட குடும்பத்தவர் விபரம்: சின்னப்பிள்ளை (வயது60), அவர்மகள் அமராவதி (வயது 39), பவானி (வயது 10), அமராவதி மகள் மீனகுமாரி [வயது ?0] அவரது நான்கு வயதிற்குட்பட்ட இரு குழந்தைகள். [சி]

## இன்று மேடையேறும்

(யாழ்ப்பாணம், சனி

அகதிகள் புனர்வாழ்வுநிதிக்காக வட்டுக்கோட்டை கலாநிலைய ஆதரவில் நடைபெற்ற நாடகமான "அணைகடந்த ஆறுகள்" என்ற நாடகம் பொன்னாலை இளம் சுடர் சனசமூகநிலையத்தினரால்பண்டத்தரிப்பு மகளிர் வித்தியாயத்தில் இன்று மேடையேற்றப்படும்.

முன்னாள் பலாலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி ஆங்கில விரிவுரையாளர் திரு. க. கயிலாயநாதன் தலைமையில் பொதுக்கூட்டமும் மற்றும் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும்.

## அரசு தெரிவித்த...

(1ம் பக்கத்தொடர்ச்சி)

பலியான தீவிரவாதிகளது சடலங்களை வீதிமார்க்கமாக எடுத்துச் செல்லப்படுவதற்கும் நல்லடக்கம் செய்யப்படுவதற்கும் இராணுவதினர் அனுமதி வழங்கியிருந்தனர்.

விக்ரருடன் பலியான ஒன்பது இராணுவதினரதும் தீவிரவாதிகள் தரப்பில் பலியான 65 பேரினதும் சடலங்கள் விடத்தல்தீவிற்கும் அங்கிருந்து வள்ளங்கள் மூலம் குருநகருக்கும் எடுத்துச் செல்லப்பட்டது. பின்னர் சடலங்கள் யாழ்ப்பாணத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டபோது பொது மக்களையும் அவற்றுடன் செல்லுமாறு தீவிரவாதிகள் நிர்ப்பந்தித்ததாகவும் அந்த அரசு அறிக்கைமேலும் தெரிவித்தது.

சடலங்கள் வீதிவழியால் யாழ் நகரில் கொண்டு செல்லப்பட்ட போது மேலே பறந்து சென்ற ஹெலிகொப்டர் பொது மக்கள் பாதிக்கப்படக்கூடாதென்ற காரணத்தால் துப்பாக்கித் தாக்குதலை மேற்கொள்ளவில்லை. சடலங்களை யாழ்ப்பாண கோட்டை இராணுவ முகாமில் ஒப்படைக்குமாறு பொதுமக்கள் தீவிரவாதிகளை வற்புறுத்தியிருந்தனர் என்றும் அந்த அரச அறிக்கை நேற்றுமாலை கூறியது (சி)

வடக்கு, கிழக்கு பகுதியைச்சேர்ந்த

# பதினைந்து தமிழ் இளைஞர் கொட்டாஞ்சேனையில் கைது

கொழும்பு, வெள்ளி

வடக்குக் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த 15 தமிழ் இளைஞர்கள் கொழும்பு கொட்டாஞ்சேனையிலுள்ள வீடுகளிலிருந்து வியாழன் இரவு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொட்டாஞ்சேனையில் இவ்விளைஞர்கள் தங்கியிருந்த வீடுகளில் பொலிஸார் விசேஷ சோதனை மேற்கொண்டதையடுத்து அவர்கள் கைதாகினர் விசாரணையின் போது இவர்கள் கொழும்பில் தங்கியிருந்தற்கான தகுந்த காரணங்களைக் காட்டாமையால் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். [கே]

## டாக்டர்களின் வெளியேற்றம்

யாழ்ப்பாணம், சனி

நாட்டில் நிலவும் அரசியல் நிலைமை காரணமாகவும் உயர்தரத்தை நாடியும் கடந்த 10 ஆண்டுகளில் 2000 இற்கு மதிகமான டாக்டர்கள் நாட்டைவிட்டு வெளியேறியுள்ளனர்.

இதனால் 1968ம் ஆண்டிலிருந்து நிலவிவரும் டாக்டர்களின் பற்றாக்குறையை நீக்க அரசினால் இயலாமலுள்ளது.

பொது மருத்துவ சேவையாளர் நிகழ்த்திய மதிப்பீட்டின் மூலம் மேற் கூறிய தகவல்கள் வெளியாகியுள்ளன. [இ]

## 16 தமிழர்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்ந்து இயந்திரப்படகில் உறைந்திருந்த இரத்தக் கறைகளைக் கழுவிவிட்டதாகச்சொல்லப்படுகிறது. அப்பொழுது தாக்குதலுக்குள்ளான அப்படகில்பாரியதுவாரங்களும் வெடிப்புகளும்காணப்பட்டதாகவும் இரத்தம் தோய்ந்த உடைகளும், மூடைகளும் இருந்ததாகவும், சடலங்கள் எதுவும் அங்கு கிடக்கவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

தாக்குதலுக்குப் பலியானவர்களின் சடலங்களும் படுகாயங்களுடன் உயிருக்காகப் போராடிக் கொண்டிருந்தவர்களும் சம்பவத்தின் பின் கடலுக்குள் வீசப்பட்டிருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

நேற்று முன்தினம் காலை 10 மணியளவில் கடற்படையினரின் பீரங்கிப் படகு, தாக்குதலுக்குள்ளான படகைக் கட்டி இழுத்துக்கொண்டு நயினாதீவு இராணுவ முகாமில் காண்பித்துவிட்டுப் பின்னர் காரைநகர் கடற்படை முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டதாகவும் அறியப்படுகிறது.

இது இவ்வாறிருக்க சம்பந்தப்பட்ட படகைக் கழுவிய தொழிலாளர் கொடுத்த தகவலைத் தொடர்ந்து புங்குடுதீவு தெற்கு கடற்கரைப்பகுதி மக்கள் பலத்த தேடுதல் மேற்கொண்டிருந்தபோதிலும் பலியானவர்களது சடலங்கள் எதுவும் கண்டுபிடிக்கப்படவில்லை.

இச்சம்பவத்தை அறிந்த குருநகர்ப்பகுதி மக்கள் மத்தியிலும் பெரும் அச்சம் ஏற்பட்டுள்ளது. [வி-ந-நி-மா]

## புலிகள் யாழ்...

(1ம் பக்கதொடர்ச்சி)

மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஸ்ரீ லங்கா அரசின் 5ம் படையின் ஊடுருவல் தமிழீழமெங்கும் காணப்படுகிறது. கிறனைட் குண்டுகள். கொடிய நஞ்சாகிய சயனைட்டுக்கள் தமிழீழத்திலேயே உள்ள உளவாளிகளிடம் ஸ்ரீ லங்கா இராணுவத்தால் விநியோகிக்கப்பட்டுள்ளன. இத் துரோக வேலையில் ஈடுபடுவோர் உடனடியாக பெமிடம் சரணடையுமாறு கேட்டுக்கொள்கிறோம். மேலும் இவர்களைக் கண்டுபிடிக்க எமக்கு உதவுமாறு எம் மக்களைக் கேட்டுக்கொள்கிறோம்

இத்துரோக வேலையில் ஈடுபட்டு கிரனைட் குண்டுடன் கைது செய்யப்பட்ட செல்வபாலாபற்றிய உங்கள் தீர்ப்பை விமர்சனப் கபட்டிக்குள் எழுதிச் சேர்க்குமாறு கேட்டுக்கொள்கிறோம். [மா]

## கூட்டணி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

னரென திரு அமிர்தலிங்கம் தெரிவித்தார்.

இச் சந்திப்பின்போது இலங்கையரசுடனான சமரசப் பேச்சு வார்த்தை தொடர்பாகவும் குறிப்பாக வடக்கிழக்கு மாகாணங்களில் நிலவும் நிலைபற்றியும் பேசவுள்ளதாகவும்அவர்சொன்னார் [கே]

## இலங்கைத்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

டுள்ளது.'"

இவ்வாறு இங்கு நடைபெற்ற பத்திரிகையாளர் மகாநாடொன்றில் பேசிய இந்தியப் பிரதமர், நிருபர்கள் கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்

அங்கு மேலும்பேசிய ராஜீவ் காந்தி இலங்கை இனப்பிரச்னை தொடர்பாக அந்நாட்டு அரசு முன்வைத்துள்ள யோசனைகளை பிட்டுப் பரிசீலனை செய்வதற்கு தமிழ்நாடு ஒத்துழைப்பு வழங்குவதாக உறுதியளித்துள்ளதெனவும் இந்த யோசனைகள் திருப்திகரமாகச் செயற்படுமெனத் தான நம்புவதாகவும் கூறினார் [கே]

# கனடா பிரயாணம்

எமது பிரதிநிதி இம்மாதம் 22ந் திகதி கனடா வரை அழைத்துச் செல்லுகின்ற: சொற்ப இடங்களே உண்டு. உடனடியாக தொடர்புகொள்ளவும்;

மற்றும்

## டென்மார்க் / ஜேர்மனி / பிரான்ஸ்

பிரயாணங்கள் ஒவ்வொருவாரமும் நடைபெறுகின்றன.

## லிப்ருஸ் லிமிட்டெட்

## LIBRAS (TRAVELDEPT.)LTD.

R. G. BUILDING
No. 70, STANLEY ROAD,
JAFFNA. A 2803



திறமையான லங்கா அசோக் லேலண்ட் உதிரிப்பாகங்கள் சாதாரண விலையில் எம்மிடம் கையிருப்பில் உள்ளது.

விலை ரூ. 25/- முதல்

லங்கா அசோக் லேலண்ட் சர்விசஸ் (பிரைவேட்) லிமிடட்
60, பார்க் வீதி, கொழும்பு 2. தொலைபேசி: 541003
தொழிற்சாலை: பனுகொடை, ஹோமாகம. தொலைபேசி: 550592


### அரச திணைக்களங்களின்

# காசோலைகளை மாற்றிக்கொடுக்க கூ. சங்க கிராமிய வங்கி நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் உள்ள அரச திணைக்களங்களினால் வழங்கப்படும் காசோலைகளை பணமாக மாற்றிக் கொடுப்பதற்கு யாழ் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்தின் கிராமிய வங்கி முன்வந்துள்ளது

இக்கட்டான சூழ்நிலையில் யாழ் வாழ் மக்களுக்கு சேவை செய்யும் நோக்கத்துடன் இச்செயற்பாட்டை செய்திட மேற்படி வங்கி முன்வந்துள்ளதாக அதன் முகாமையாளர் பத்திரிகைகளுக்கு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கட்பட்டுள்ளதாவது: திணைக்களங்களினால் வழங்கப்படும் ஒய்வூதியம், சம்பளம் ஆகியவற்றுக்கான காசோலை சம்பந்தப்பட்டோர் எமது கிராமிய வங்கிமூலம் பணமாகப்பெறுவதற்கு கிராமிய வங்கியில் ஓர் சேமிப்புக்கணக்கை ஆரம்பிக்கவேண்டும். ஆரம்ப சேமிப்பு வைப்புத் தொகை 100 ரூபாவாகும். மேலும் ஒய்வூதியம், சம்பளம் வழங்கும் அதிகாரிகளுக்கு தத்தமது சேமிப்பு கணக்கு இலக்கத்தை அறிவித்து கிராமிய வங்கி மூலம் பெறுவதற்கு அவர்கள் விண்ணப்பிக்க வேண்டும்'' இதுபற்றிய மேலதிக விபரங்களை யாழ் மின்சார நிலைய வீதியில் உள்ள மேற்படி வங்கி தலைமைக்காரியாலயத்தில் அறிந்து கொள்ளலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## அடையாளம் காணப்படவில்லை

யாழ்ப்பாணம், சனி

காங்கேசன்துறைக் கடற்கரை வீதியில் சைக்கிளில் சென்று கொண்டிருந்த போது இராணுவத்தால் சுடப்பட்டு இறந்த நபரின் சடலம் அடையாளம் காண்பதற்காக யாழ். பெரியாஸ்பத்திரிச் சவச்சாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இது வரையும் இச்சடலம் அடையாளம் காணப்படவில்லை. (ஒ- ச)

### போதைவஸ்துக் கடத்தல்

# நெதர்லாந்து நாட்டு பிரஜைக்கு மரணதண்டனை

கொழும்பு, வெள்ளி

போதை வஸ்துக் கடத்தல் குற்றத்திற்காக நெதர்லாந்து பிரஜை ஒருவருக்கு இலங்கையில் மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

நீர்கொழும்பு மேல்நீதிமன்ற நீதிபதி லக்ஸ்மன் விரசேகர இந்தத் தண்டனையை நெதர்லாந்தைச் சேர்ந்த ஒருவருக்கு விதித்துள்ளார்.

இவர் கடந்த ஏப்ரல் மாதம் கட்டுநாயக்க விமான நிலையத்தில் பாதுகாப்பு அதிகாரிகளினால் கைது செய்யப்பட்டார்.

கொழும்பிலிருந்து ஜெனிவாவிற்குச் செல்லும் விமானமொன்றில் 452 கிராம் ஹீரோயினை எடுத்துச் செல்ல முற்பட்டபோது இவர் கைது செய்யப்பட்டார்.

போதைப்பொருள் கடத்தலுக்காக இலங்கையில் மரண தண்டனை நிறைவேற்றப்பட்ட இரண்டாவது நபர் இவரென்பது குறிப்பிடத்தக்கது. [ஒ]

## இன்றைய பலன்

(3ம் பக்கத் தொடர்ச்சி)

தனுசு: பிதாவழித் தனவரவுமுண்டு. புதிய தொழில் முறைகளைக் கையாளுவீர்கள். எதையும் முன்னணியில் நின்று சாதிப்பீர்கள்.

மகரம்: புதுமனை கட்டவும் ஆலோசிப்பீர்கள் வெளியிடத்துச் செய்தியும் மகிழ்ச்சி தரும தொழில் மகிழ்ச்சியுமுண்டு.

கும்பம்: முன்னேற்றப் பாதையில் வீறுநடை போடுவீர்கள் பணவருவாயும் கிட்டும். பெரியோர் ஆதரவும் தாராளமாகக் கிடைக்கும்.

மீனம்: தொழில் மந்தநிலை காணப்படும். கொடுக்கல் வாங்கல் பிணக்கும் தோன்றும். அறிஞர்களின் அறிமுகமும் கிட்டும்.

திருமலை
வே. ரவீந்திரன்

## பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

கரவெட்டியைச் சேர்ந்த சிதம்பரப்பிள்ளை சிற்றம்பலம் என்பவரின் மரணசாதனம் சம்பந்தப்பட்ட விடயத்தில்.

— மரணமெய்தியவர்.

சிற்றம்பலம் மகள் சந்திரா தேவி, பெரியதோட்டம், கரவெட்டி கிழக்கு.
மனுதார்.

இல: தத்துவம்/ 3991

எதிர்

1. சிற்றம்பலம் கைப்பெண் சின்னப்பிள்ளை
2. சிற்றம்பலம் மகன் சிதம்பரநாதன்,
3. சிற்றம்பலம் மகள் இந்திராதேவி,
4. சிற்றம்பலம் மகள் பத்மநிதி எல்லோரும், பெரியதோட்டம் கரவெட்டி.

எதிர்வாதிகள்.

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச்சாசனத்தை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் கொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதிடப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அச்சுறையுள்ள ஆள் எவரும் 1986ம் ஆண்டு கார்த்திகை மாதம் 14ந் திகதியன்று காலை 9-00 மணிக்கு இந் நீதிமன்றத்தில் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுவதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணங்காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகிறார்.

1986ம் ஆண்டு ஐப்பசி 01ந் திகதி.

நீதிமன்றக்கட்டளைப்படி,
கு. குலசிங்கம்,
பதிவாளர்,
யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றம்.

வரைவு
மா. தியாகராசா
சட்டத்தரணி,
ஆனைக்கோட்டை.

(C 5229)


# 25 வருடங்களுக்கு மேலாக நாம் ஆற்றும் உன்னத சேவை

## நீங்கள் எம்மிடம் முதலீடு செய்வதற்கு தரும் உத்தரவாதம்

# ஸ்டான்டர்ட் பினன்ஸ்

கடந்த 25 ஆண்டுகளுக்கு மேலாக வெற்றிகரமாக செயல்பட்டு வரும் எமது ஸ்தாபனம் ஆயிரக்கணக்கான வாடிக்கையாளர்களின் முதலீட்டுக்கு உத்தரவாதம் வழங்கி நம்பிக்கையளிக்கிறது.

- கவர்ச்சிகரமான வட்டியை வழங்குவதுடன் பெரிய, சிறிய முதலீடுகள் என்ற பேதமின்றி சகலருக்கும் சமமான சேவையளிக்கின்றது.
- குறைந்த பட்ச முதலீடு, ரூபா 1000/-. விரும்பும் போது முதலீட்டை அதிகரித்துக் கொள்ளலாம்.
- வட்டியை மாதமொரு முறையாகவோ அல்லது காலாண்டுக்கொரு முறையாகவோ வருடாந்தமாகவோ பெற்றுக் கொள்ளலாம்.
- முதலீட்டுக்கேற்றவாறு கடன் வசதிகளை பெறவும், தவணைமுறையில் பொருட்களை கொள்வனவு செய்யவும் வசதிகள் உண்டு.

இன்றே எம்முடன் தொடர்பு கொண்டு 25 வருடங்களுக்கு மேலாக ஆயிரக்கணக்கான வாடிக்கையாளர்கள் பெற்று வரும் நலன்களை, நீங்களும் பெறுங்கள்.

நிதி நிலைமை தகவல்கள்

| | 1982/83 ரூபா | 1983/84 ரூபா | 1984/85 ரூபா |
|---|---|---|---|
| மூலதனம் | [illegible] | 1,700,000 | 1,700,000 |
| மூலதன ஒதுக்கீடு | 9,944,500 | 9,944,500 | 9,944,500 |
| வருவாய் ஒதுக்கீடு | 454,741 | 1,200,754 | 1,452,653 |
| மூலதனமும் ஒதுக்கீடும் | 12,099,241 | 12,845,264 | 13,097,153 |
| சேமிப்புகள் | 72,875,705 | 90,507,406 | 125,346,021 |
| கடன்கள் | | 3,211,633 | 1,484,621 |
| சேமிப்பாளர்களுக்கு வட்டி வழங்கு முன் கிடைத்த லாபம் | 15,034,105 | 23,101,763 | 24,658,633 |
| சேமிப்பாளருக்கு வழங்கிய வட்டி | 14,554,614 | 20,060,740 | 23,306,744 |
| வரிவிதிக்கு முன் கிடைத்த நிகர லாபம் | 479,491 | 3,041,023 | 1,351,888 |
| வரிவிதித்த பின் கிடைத்த நிகரலாபம் | 479,491 | 3,041,023 | 1,351,888 |
| ஆதாய பங்குலிதம் | 510,000 | 2,295,000 | 1,100,000 |
| | 30% | 135% | 65% |

1985ம் ஆண்டு டிசம்பர் 31ம் திகதி வரை சேமிப்புகள் ரூபா 15 கோடிக்கு மேல்.

இயக்குநர்கள்:
எச். எம். கூருரே— தலைவர்
மா சட்டத்தரணி (இன்னர் டெம்பள்) சட்டத்தரணி
F. B. I. M. (Eng) A: C. I. (Lond.)
எம். வி. தியாகராஜா, உப தலைவர், நிதி இயக்குநர்
F. C. M. A., F. C. I. A. A., F. B. I. M.
பி. ஞானசேகரம், செயலாட்சி இயக்குநர்
ஜே. சி. ஆர். குரே
F. C. M. A. M. B. I. M.
பிரசன்ன எஸ். குணவர்தன
J. P. U. M- A. C. I. (Lond) A. I. Arb. (Lond)
சட்டத்தரணி, சட்ட ஆலோசகர், நொத்தாரிசு

முக்கிய விவகாரங்கள்
தவணை முறை கொள்வனவுக்கு நிதி வழங்குதல்.
டிரக்டர், டிரெயலர்கள், மோட்டார் வாகனங்கள்,
தேயிலை இயந்திரங்கள், வானொலி பெட்டிகள், சைக்கிள்கள்,
தொலைக்காட்சி பெட்டிகள் போன்ற பொருட்களை குத்தகைக்கு விடுதல்.

ஏப்ரல் 1ம் திகதி முதல் அமுலுக்கு வரும் புதிய வட்டி விகிதங்கள்.

வட்டி விகிதங்கள்

| காலம் | | ஒரு மாதத்துக்கு | முதிர்ச்சிக்கு பின் |
|---|---|---|---|
| 6 | மாதங்கள் ரூபா 1000/- மும் அதற்கு மேலும் | — | 15% |
| 1 | வருடம் ரூபா 1000/- மும் அதற்கு மேலும் | 15% | 17% |
| 2 | வருடங்கள் ரூபா 1000/- மும் அதற்கு மேலும் | 17% | 20% |
| 2 | வருடங்கள் ரூபா 100, 000/- மும் அதற்கு மேலும் | 19% | 23% |

எம்மிடம் முதலீடு செய்வதே விவேகமானது

BG BROWNS GROUP

ஸ்டான்டர்ட் பினன்ஸ் லிமிட்டெட்
481, டார்லி வீதி, கொழும்பு 10.
தொலைபேசி: 597111

# ஆங்கிலம் படிக்கிறீர்களா?

பொதுவான ஆங்கில அறிவைப் பெறுவதற்கு நீங்கள் படிப்பவராலைும் சரி

G. C E (O/L பரீட்சைக்கு ஆங்கில பாடத்தைப் படிப்பவராலுைம் சரி,

உங்களுக்கு மிகமிக உதவியாக வெளிவந்திருக்கிறது

## LEARNER' S ENGLISH
## லேணேர்ஸ் இங்கிலிஷ்

ஆங்கில மொழியின் அடிப்படை இலக்கணத்தை மிகத் தெளிவான முறையில் தமிழ்மூலம் உங்களுக்கு விளக்கி, உங்களுடைய ஆங்கில அறிவை நன்கு விருத்திசெய்கிறது இந்நூல். இதுபோன்ற நூல் இதுவரை வெளிவந்ததில்லை.

இது ஒரு 'வரதர் வெளியீடு'

விலை:- ரூபா 16

எல்லாப் புத்தகசாலைகளிலும் கிடைக்கும் (A 1468)


# யாழ். சந்தையில் கடைகள் உடைக்கப்பட்டு பொருள்கள், பணம் கொள்ளை

யாழ்ப்பாணம் வியா

யாழ் நகர் சந்தைக்குள் இருக்கும் பழக்கடைகள் வெற்றிலைக்கடைகள் தையற்கடைகள் ஆகியவற்றின் பூட்டுக்கள் கடந்த புதனிரவு உடைக்கப்பட்டு பழவகைகள், பெற்ரோமாக்ஸ், பணம், உடுபுடவைகள் என்பன திருடப்பட்டுள்ளன.

சந்தையின் உட்புறமாக அமைந்துள்ள 'பியாபி' என்ற தையற்கடையின் பூட்டுக்கள் உடைக்கப்பட்டு அங்த 'ஓடருக்குத்' தைத்து வைக்கப்பட்டிருந்த இரண்டாயிரம் ரூபா பெறுமதியான உடுப்புகள் திருடப்பட்டுள்ளன.

ஆர் வி கே நாதன் என்பவரின் வாழைப்பழக்கடையில் மூன்னூறு ரூபா பணமும் இரண்டு வாழைக் குலைகளும் திருடப்பட்டுள்ளதுடன் எம். கைலாசபிள்ளை என்பவரின் பழக்கடையில் 500 ரூபா பணமும் ஒரு பெற்ரோமாக்சும், பழவகைகளும் திருடப்பட்டுள்ளன.

எஸ் ஜெயராசா என்பவரின் பழக்கடையில் பழவகைளும், பெற்ரோமாக்சும், 1500 ரூபா பணமும் திருடப்பட்டுள்ளது.

தேவராசா என்பவரின் பழக்கடையில் பெற்ரோமக்ஸ் ஒன்றும் பணமும், பழமும் திருடப்பட்டுள்ளது அருகில் உள்ள வெற்றிலைக்கடையில் இருந்த சில்லறைப்பணமும் எடுத்துச் செல்லப்பட்டுள்ளது

(ச ஒ)

# நிர்வாகிகள்

மன்னார், வெள்ளி

மன்னார் லயன்ஸ் கழகத்தினரின் 86/87-ம் ஆண்டுக்கான நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவாகினர்.

தலைவர் டாக்டர் எம். கதிர்காமநாதன்; உபதலைவர்கள் கே. அபுபக்கர் எஸ் சண்முகானந்தன் வி. தாமோதரம்பிள்ளை, செயலாளர் திரு. எஸ். எஸ். இராமகிருஷ்ணன் பொருளாளர் திரு. எ எஸ். யோண்தாசன், பத்திரிகையாளர் சங் சகோதரர் கில்லறி யோசப், இயக்குநர்கள் எஸ். எஸ். தாஞ்சுதீன் சங் சகோதரர் யோசப்மைக்கல் கே வி இரத்தினம் மேற்படி கூட்டம் அண்மையில் கழக முன்னாள் தலைவர் திரு. கே. குணரெத்தினம் அவர்கள் தலைமையில் இடம்பெற்றது.

(ஊ)


# பிரயாண ஒழுங்குகள்

டென்மார்க், கனடா ஆகிய நாடுகளுக்கு ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் எமது முகவர் உங்களை அழைத்துச் செல்வார் போகிறவர்கள் உடனடியாக எமது காரியாலயத்தில் தொடர்புகொள்ளவும்.

அத்துடன்,

ஜேர்மனி, பிரான்ஸ் ஆகிய நாடுகளுக்கும் விசாவுடன் பிரயாண ஒழுங்கு செய்து தரப்படும்.

சிங்கப்பூரில் — பணிப்பெண்கள்

Housemaid, Railway underground general workers இவற்றுக்கான வருமான வாய்ப்புகள் 21 நாளில் செய்து கொடுக்கப்படும்.

சவுதி, குவைற்-கிளினர், ஹறவேஸ்

இவற்றுக்கான வருமான வாய்ப்புக்கள் உடன் செய்து கொடுக்கப்படும்.

## GROUP ATLANTIC

அடைக்கலமாதா கோவில் பின்பக்கம்

163, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

[A 1390]


# முல்லைத்தீவில் ஹர்த்தாலும் கடையடைப்பும்

முல்லைத்தீவு, வெள்ளி

முல்லைத்தீவு நகரில் ஞாயிறு முழுநளும் ஹார்த்தாலும் கடையடைப்பும் இடம் பெற்றன.

முல்லைத்தீவு நகரிலுள்ள 'ஈஸ்வரி றேடஸ்' கடையில் சனியிரவு ஓடுகள் பிரிக்கப்பட்டு களவு இடம்பெற்றதனை அடுத்தே இந்த கடையடைப்பும் ஹர்த்தாலும் அனுட்டிக்கப்பட்டன

முல்லைத்தீவு வர்த்தக சங்கம் களவுக்கு எதிராக இந்நடவடிக்கையைமேற்கொண்டது

(எ)


# பிரயாண ஒழுங்குகள்
## அவசர தேவை

★ சவூதி அரேபியா ★ லிபியா

(ஹெவி வெயிக்கிள் பஸ் றைவேஸ்)

5 வருட அனுபவத்துடன்

வயது 25 — 44 வரை.

ஸ்கூல் கிளீனேஸ்: 100 பேர்

பஸ் கிளீனிங் லேபறேஸ்: 100 பேர்

ஒரு வாரத்தினுள் பிரயாணம் செய்யலாம்.

உடன் பாஸ்போட், 20 படம்

மற்றும்

லைசென்ஸ் முதலிய ஆவணங்களுடன் நேரில் வரவும்.

## யூனிவேசல் ஏஜென்சி

125, ஸ்ரான்லி றேட், யாழ்ப்பாணம்.

(பெற்றோலியம் கூட்டுத்தாபனத்துக்கு முன்பாக, ஆயுர்வேத கல்லூரி அருகாமையில்)

(A 1393)


# வவனியா வழமைக்கு திரும்பியது

வவனியா, வெள்ளி

ஊரடங்குசட்டம் தளர்த்தப்பட்டதினை அடுத்து வவனியா நகர் வழமைக்குத் திரும்பியது. மக்கள் தமது அன்றாட பொருள்களை வாங்குவதற்கு நகருக்கு பெரும் தொகையாக வந்திருந்தனர்.

சகல அரச அலுவலகங்களும் திறக்கப்பட்டிருந்தன இ. போ ச பஸ்களும் தமது சேவையினை ஆரம்பித்தன.

ஊரடங்குச்சட்டம் அமுலில் இருந்த வேளையில் வவனியா நிர்வாக மாவட்டத்தில் எதுவிதமான அசம்பாவிதங்களும் இடம்பெறவில்லை.

ஆனாலும் பாதுகாப்பு படையினர் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர். [எ]


# போதனா வைத்தியசாலை - யாழ்ப்பாணம்
## (யாழ் / பெரியாஸ்பத்திரி)
## கேள்வி விளம்பரம்

### சலவை ஒப்பந்தம் - 1987

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் அழுக்குத் துணிகளை 1987 - 01 - 01 தொடக்கம் 1987 - 12 - 31 வரை சலவை செய்வதற்கான கேள்விப் பத்திரங்கள் 1986 நவம்பர் மாதம் 12 திகதி காலை 10 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

2. கேள்விகள் உரிய பத்திரங்களில் இரு பிரதிகளாக நிரப்பி அனுப்பப்படல் வெண்டும. எனது பெயருக்கு ரூபா 150/ ஐ வைத்திபசாலை காரியாலயத்தில் செலுத்தி கேளவிப்பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

3. கேள்வித் பத்திரங்கள் நேரில் ஒப்படைக்கப்பட்டால் ஒப்புக்கொண்டதற்கு ஒரு பற்றுச்சீட்டு வழங்கப்படும் ஒப்பந்தக்காரர் விரும்பினால் கேள்விப் பத்திரங்களைப் பதிவுத் தபால்மூலம் அனுப்பலாம்.

4. கேள்விப் பத்திரங்களை அவைகள் ஏற்றுக் கொள்ளப்படும் முடிவு திகதிக்கு முந்திய நாள் நண்பகல் 12 மணிக்கு முன்பதாகப் பெற்றுக்கொள்ள வேண்டும் கேள்விகள் என்னால் வழங்கப்படும் அதற்குரிய பத்திரங்களில் இல்லாவிடில் நிராகரிக்கப்படும். முடிவு திகதி அன்று காலை 10 மணிக்குப் பின்வரும் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

5. ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒப்பந்தக்காரர் பிணைப் பணமாக ரூபா 1500/-ஐச் செலுத்தி ஒப்பந்தத்தில் கைச்சாத்திடல்வேண்டும் ஏற்றுக்கொள்ளப்படாத கேள்விப் பத்திரங்களின் மேல் செலுத்தப்பட்ட கட்டணங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒப்பந்தம் கைச்சாத்தாகியதும் திருப்பிக் கொடுக்கப்படும்.

6. கேள்விப் பத்திரங்கள் நவம்பர் மாதம் 12-ம் திகதி காலை 10 மணிக்கு எனது காரியாலயத்தில் திறக்கப்படும்போது கேள்விக்காரர்களோ, அவர்களின் பிரதிநிதிகளோ பிரசின்னமாயிருக்கவும்.

7. மேலதிக விபரங்களை இவ் வைத்தியசாலையின் கணக்காளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

வைத்திய கலாநிதி

சி. எஸ் நச்சினார்க்கினியன்,

கண்காணிப்பாளர்.

போதனா (பொது) வைத்தியசாலை,

யாழ்ப்பாணம்.

(A 1470)


நாளை

# கூட்டுறவு உப-விதி கருத்தரங்கு

யாழ்ப்பாணம், சனி

பல நோக்குக் கூட்டுறவுச் சங்க புதிய உப விதி அறிமுகம் பற்றிய கருத்தரங்கு நாளை ஞாயிற்றுக்கிழமை நடாத்த முடிவு செய்யப்பட்டுள்ளது

யாழ் தேசிய கூட்டுறவுச் சபையினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இக் கருத்தரங்கு சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச்சங்கத்தின் கூட்ட மண்டபத்தில் நடைபெறும்

இக் கருத்தரங்கு கடந்த 5ம் திகதி நடாத்துவதெனத் தீர்மானித்திருந்ததாகவும் தவிர்க்க முடியாத காரணங்களால் அன்று நடைபெறவில்லை என்றும் தவறாது சம்பந்தப்பட்ட சகலரும் சமூகமளிக்க வேண்டுமென்றும் தேசிய கூட்டுறவுச்சபையின் வடபகுதி தலைவர் திரு சி. சிவம்கராசா கேட்டுள்ளார்.

(மா)


# குதூகல ஆரம்பம்
## 18-10-1986

சனிக்கிழமை

ஜவுளி உலகின் புதிய சங்கமம்

Mummy Daddy ®

## மம்மி டடி

100, கண்டிவீதி, சாவகச்சேரி.

(C 5224)

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY
சனிக்கிழமை 18 10-86

## பொறியியல் பீடம் மீண்டும் அக்.28-ல் ஆரம்பம்

கொழும்பு, வெள்ளி

பேராதனைப் பல்கலைக்கழகப் பொறியியல் துறை பீடம் மீண்டும் இம்மாதம் 28ம் திகதி செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகிறது.

கடந்த மாதம் பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற சிறு அசம்பாவிதத்தைத் தொடர்ந்து பொறியியல் துறை பீடம் மூடப்பட்டது.

மீண்டும் இம்மாதம் 28ம் திகதி பொறியியற்பீட வகுப்புகள் ஆரம்பமாகுமென்றும், பொறியியற்பீட சகல பரீட்சைகளும் நவம்பர் 7ம் திகதி ஆரம்பமாகுமென்றும் பல்கலைக்கழக உபவேந்தர் தெரிவித்துள்ளார். [கி]

## இனப்பிரச்னை பேச்சுக்களில் பங்குபற்றுவதுபற்றி

# தீவிரவாதிகள் இரண்டு வாரங்களில் தீர்மானிக்கவேண்டும்

## -அமைச்சர் லலித்

கொழும்பு, வெள்ளி

''இனப் பிரச்னையைத் தீர்த்துவைப்பதற்கான சமாதானப் பேச்சுக்களில் கலந்து கொள்வதுபற்றித் தீவிரவாதிகள் இரண்டு வாரங்களுக்குள் தீர்மானிக்கவேண்டும். பயங்கரவாத நடவடிக்கைகளை ஒழிக்க அமெரிக்கா இலங்கைக்கு உதவ முன்வந்துள்ளது''.

இவ்வாறு தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு. அத்துலத்முதலி தியத்தலாவையில் இன்று காலை நடைபெற்ற கருத்தரங்கொன்றில் உரையாற்றுகையில் கூறினார்.

தொடர்ந்து பேசுகையில் அவர் மேலும் கூறியதாவது:-

'தீவிரவாதிகளைப் பேச்சுக்களில் கலந்துகொள்ளச்செய்ய இந்தியா தேவையான முயற்சிகள் அனைத்தையும் செய்துவருகின்றது.

''இனப்பிரச்னை தீர்வுக்கான சமாதானமுயற்சி ஏமாற்றமடைந்தால் அரசு தகுந்த நடவடிக்கை எடுக்கப் பின்வாங்காது.

''தீவிரவாதத்தை ஒழிப்பதில் இலங்கைக்கு உதவுவது என அமெரிக்கா தெரிவித்துள்ளது இனப்பிரச்னையைத் தீர்த்துவைப்பதற்கு இலங்கை அரசின் யோசனைகளைக் கவனத்திற்கு எடுத்துக்கொண்ட பின்னரே அமெரிக்கா இவ்வாறு உதவ முன்வந்துள்ளது.

'' பச்சுக்களின்போது சகல அரசியற் கட்சிகளும் கலந்துகொண்டு இனப்பிரச்னையைத் தீர்ப்பதற்குத் தம்மாலான பங்களிப்டைச் செய்யவேண்டும் '' [ஏ-ம்க]

## ஆணின் சடலம்

யாழ்ப்பாணம், சனி

பலாலி ராணுவ முகாமிலிருந்து மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்திற்கு இலக்காகி மரணமான இனந்தெரியாதநபரொருவரின் சடலம் யாழ். ஆஸ்பத்திரிச் சவச்சாலையில் வைக்கப்பட்டுள்ளது.

சுமார் 45 வயது மதிக்கத்தக்க இந்நபரின் சடலத்தை காங்கேசன்துறைப் பொலிஸ் பகுதியினர் யாழ் ஆஸ்பத்திரியில் நேற்று ஒப்படைத்தனர். [ச-எ]

## ஆஸி-இந்திய கிரிக்கெட்:

# கவாஸ்கர் 33-வது டெஸ்ட் செஞ்சரியை பெற்றார்

புதுடில்லி, ஒக் 18

இந்திய அணியின் முன்னாள் காப்டனும், ஆரம்ப துடுப்பாட்டக் காரருமான சுனில் கவாஸ்கர் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடி 33-வது டெஸ்ட் செஞ்சரியை பெற்றார். நேற்றைய ஆட்டத்தில் 103 ஓட்டங்களைப் பெற்றதன் மூலம் இவர் தனது 33-வது செஞ்சரியை பெற்றுக் கொண்டார்.

இந்திய - ஆஸ்திரேலிய அணிகளுக்கிடையில் பம்பாயில் நடைபெறும் மூன்றாவதும் இறுதியுமான கிரிக்கெட் டெஸ்ட் போட்டியின் 3-ம் நாள் முடிவில் இந்திய அணி 5 விக்கெட்டுகள் இழப்பிற்கு 291 ஓட்டங்களைப் பெற்றது.

இவ் ஆட்டத்தில் சுனில் கவாஸ்கர் 1 3 ஓட்டங்களை பெற்றதன் மூலம் ஆஸ்திரேலிய அணிக்கெதிராக ஆகக் கூடுதலாக 1 545 ஓட்டங்களை 20 டெஸ்ட் போட்டிகளில் பெற்ற வெளிநாட்டு வீரர் இவராவார். இதற்கு முன் குண்டப்பா விஸ்வநாத் 1 538 ஓட்டங்களை பெற்றிருந்தார்.

நேற்றைய ஆட்ட முடிவில் வெங்சக்கார் 41 ஓட்டங்களுடனும், ரவிசாஸ்திரி 37 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காதிருந்தனர். ஆஸ்திரேலிய அணி தரப்பில் மதியூஸ் சிறப்பாக பந்துவீசி 4 விக்கெட்டுகளை கைப்பற்றினார். [சி]

## “இராணுவத்தினர் சரமாரியாகச் சுட்டதில்—

# எனது தாயாரும் இரு சிறுமிகளும் ஸ்தலத்திலேயே பலியாகினர்”

யாழ்ப்பாணம், சனி

''ஹெலிகொப்டரில் வந்து இறங்கிய ராணுவத்தினர் வீட்டினுள் புகுந்து கண்டபடி சுட்டனர். அச்சமயம் எனது தாயாரும், வீட்டிலிருந்த இரண்டு சிறுமிகளும் ஸ்தலத்திலேயே பலியானார்கள் 'பெற்சீற்'றால் எனது அண்ணனை மூடி வைத்திருந்தபடியால் அவர் உயிர் தப்பினார்''.

இவ்வாறு மடுக்கோவில் பெரியதம்பனையில் கடந்த செவ்வாய்க்கிழமை இராணுவத்தினரால் சுற்றிவளைக்கப்பட்டு நடத்தப்பட்ட தாக்குதலில் காயங்களுடன் உயிர்தப்பி யாழ். பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ள கார்த்திகேசு ஜெயகௌரி 18 வயது, என்ற இளம் பெண் கூறினார்.

அவர் இத்தாக்குதல்பற்றி மேலும் தெரிவித்ததாவது:-

''கடந்த செவ்வாய்க்கிழமை காலை 0 மணியளவில் பெரிய தம்பனைப் பகுதியைச் சுற்றி ஹெலிகொப்டர் ஒன்று பல தடவைகள் வட்டமிட்ட பின் சுடத்தொடங்கியது சிறிது நேரத்தின்பின் ஹெலிகொப்டர் மிகவும் தாழ்வாகப் பதிந்ததும் அதிலிருந்து ஐந்து ராணுவத்தினர் எமது வீட்டுக்குப் பக்கத்திலுள்ள வீட்டுவளவினுள் குதித்தனர்.

''இவ்வாறு குதித்த ராணுவத்தினரை நோக்கிப் போராளிகள் தாக்குதலை மேற்கொண்டனர். இதேசமயம் மேலும் பல இராணுவத்தினர் இப்பகுதியைச் சுற்றிவளைத்துக்கொண்டனர் ராணுவத்தினரிற் சிலர் தென்னை மரங்களில் ஏறியிருந்துகொண்டு கண்டபடி சுட்டனர்.

''மீண்டும் ஹெலிகொப்டர் ஒன்று வந்து நிலத்தை நோக்கிச் சுட்டதுடன் கிறனேற்றுக்களும் வீசப்பட்டன.

''இச்சமயம் இப்பகுதியிலுள்ள மக்கள் வீடுகளில் பதுங்கி ஒழித்துக்கொண்டனர்.

''எனது தாயார் அண்ணனை அறையிலவைத்து பெற்சீற்றால் மூடிவிட்டார். எனது தாயார், குழந்தைகள் உட்படப் பலர் எமது வீட்டில் ஒழிந்திருந்தோம் இச்சமயம் எமது வீட்டுவளவினுள் புகுந்த ராணுவத்தினர் கண்டபடி சுட்டனர்.

''இச்சூட்டினபோது எனது தாயார் ஸ்தலத்தில் பலியானார். இச்சம்பவத்தின்போது எமது வீட்டில் ஒழிந்திருந்த கிருபா (11 வயது) என்ற சிறுமியும், குமாரசாமியின் இரண்டு வயதுப் பெண் குழந்தையும் பலியானார்கள் எனக்குக் கையிலும் கால்களிலும் காயமேற்பட்டது.

''இதன்பின்பு போராளிகள் வந்து இறந்துபோன எனது தாயாரையும், சிறுமிகளையும், என்னையும் பண்டிவிரிச்சான் கிராமத்தில் கொண்டுவந்து சேர்த்தனர். அங்கு மரணச் சடங்குகளைச் செய்தோம் பின்பு அங்கிருந்து நான் யாழ் ஆஸ்பத்திரிக்கு வந்தேன்.'' [ச-எ]

## இன்று

யாழ்ப்பாணம், சனி

பாலர் கல்விக்கழகத்தின் 10-வது ஆண்டின் 10-வது ஆட்சிக்குழுக் கூட்டம் இன்று பிற்பகல் யாழ். வீதியிலுள்ள சுழக இல்லத்தில் நடைபெறவுள்ளது. [மா]

## இன்று சங்காபிஷேகம்

யாழ்ப்பாணம், சனி

யாழ் மருத்துவபீடம் முன்பாகவுள்ள கேணியடி வைரவர் கோவில் சங்காபிஷேகம் இன்று சனிக்கிழமை காலை நடைபெறும்.

1008 சங்குகள் வைத்து பல வேதவிற்பன்னரின் வேதபாராயணத்துடன் நடைபெறும் இவ் அபிஷேகத்தை யாழ். மருத்துவபீட மாணவர்கள் ஊழியர்கள் நடாத்துவார்கள்.

## ‘குண்டுவீச்சில்’ அரச விடுதி தரைமட்டம்

பச்சிலைப்பள்ளி, வெள்ளி

பெரியதம்பனையில் 'பொம்பர்' விமானங்கள் குண்டு வீசியதில் அரசாங்க விடுதியொன்று தரைமட்டமானது

கடந்த செவ்வாய்க்கிழமை அப்பகுதியில் இரண்டு பொம்பர் விமானங்களும், ஹெலிகொப்டரும் பலத்ததாக்குதலை நடத்தின.

பெரியதம்பனையில் கடந்த சில நாட்களாக போராளிகளுக்கும் ஆயுதப்படையினருக்குமிடையில் இடம்பெற்றுவரும் மோதலையடுத்து அச்சத்தால் அப்பகுதி மக்கள் தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறிவருகிறார்கள்' [சி]

## மரண அறிவித்தல்

### கார்த்திகேசு அம்பலவாணர் (சின்னத்தம்பி)

சுழிபுரம் மேற்கைச்சேர்ந்த முன்னாள் நுகேகொட வர்த்தகரான சின்னத்தம்பி என அழைக்கப்படும் கார்த்திகேசு அம்பலவாணர் காலமானார். இவர் காலஞ்சென்ற இலட்சுமியாரின் அன்புக் கணவரும், ஞானேஸ்வரி, சிவசண்முகமூர்த்தி [லண்டன்] ஆகியோரின் தந்தையும், ஞானியார் பொன்னம்பலத்தின் மருமகனும், காலஞ்சென்ற மலேசியா இராமலிங்கத்தின் அருமைத் தம்பியும், உமாபதி நீர்ப்பாசன இலாகா, கிளிநொச்சி). ரூபவதி [லண்டன்] ஆகியோரின் மாமனாரும், நிதர்சனி, சயந்தன் ஆகியோரின் பேரனும். பரமலிங்கம் (தென்ஆபிரிக்கா), கார்த்திகேசு அரசினர் வைத்தியசாலை, கொழும்பு), வைத்திலிங்கம் [லண்டன்], பரமேஸ்வரி [மலேசியா), பூமாதேவி (மலேசியா). திருமதி நாகம்மா துரைசிங்கம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 18 10-86 சனிக்கிழமை (இன்று) காலை 11-00 மணியளவில் திருவடி நிலை மயானத்தில் நடைபெறும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:- இன்ரநெஷனல் கொம்யூனிக்கேசன் கொம்பிளக்ஸ், மானிப்பாய்.

(C 5262)

## மரண அறிவித்தல்

### திருமதி. பகவதி விஸ்வலிங்கம்

சங்குவேலி தெற்கு மானிப்பாயைச் சேர்ந்த பகவதி விஸ்வலிங்கம் 16-10-86ல் காலமாகி விட்டார் இவர் காலம்சென்ற விஸ்வலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், சிறி இராமச்சந்திரன் [W. Germany], சைலைநாதன் [யாழ் பல்கலைக் கழகம்] பகிரதி, சிவதாஸ் [Viskam Cool Spot Manipay], சத்தியபாமா [மானிப்பாய் மகளிர் கல்லூரி], பிருந்தா [மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை] ஆகியோரின் அன்புத்தாயாரும். இ. செல்வநாயகத்தின் அன்பு மாமியுமாவார், ஈமைக்கிரியை 18-10-86 சனிக்கிழமை [இன்று] காலை 9 மணியளவில் மானிப்பாய் பிப்பிலி மயானத்தில் நடைபெறும் உற்றார். உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும் தகவல் கொடுப்பவர் செ. துரைசிங்கம். [C-5260]

### திருமதி பேள் ரெஜீனு அகஸ்தீன் (சரஸ்)

திருமதி பேள் ரெஜீனு அகஸ்தீன் (சரஸ்) காலமானார். இல 7. விதானை வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திருமதி பேள் ரெஜீனு அகஸ்தீன் (சரஸ்) 15-10 86 அன்று யேசுவினடி சேர்ந்தார். இவர் V. S. S. அகஸ்தீன் (இளைப்பாறிய உதவி அரசாங்க அதிபர்] அவர்களின் அன்பு மனைவியும், ஸ்ரனி அகஸ்தீன், திருமதி சுகிர்தராணி பஸ்தியாம்பிள்ளை, ரெஜி அகஸ்தீன், கனியூட் அருள்நேசன் அகஸ்தீன் ஆகியோரின் அருமைத் தாயாரும், திருமதி ராசம்மா பஸ்தியாம்பிள்ளையின் அருமை மகளும் திரு-வில்வம் பஸ்தியாம்பிள்ளை, காலஞ்சென்ற விக்ரோறியா, காலஞ்சென்ற விஜயம் பஸ்தியாம்பிள்ளை (ஆசிரியர்] காலஞ்சென்ற Dr வீரசிங்கம் பஸ்தியாம்பிள்ளை, அல்பிரட் பஸ்தியாம்பிள்ளை, காலஞ்சென்ற மேரி மாகிரெட், சேச்சில் பஸ்தியாம்பிள்ளை ஈடன் பஸ்தியாம்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரியும், திரு மரியேந்திரன் பஸ்ரியாம்பிள்ளை, ராஜி, பெலா, ஆகியோரின் அன்பு மாமியாரும். மரியற்ரு. லொறற்ரு, சஞ்ஜே. றேசான் ஆகியோரின் பேத்தியுமாவார். அன்னாரின் பூதவுடல் 18-10-86 பி.ப. 4 மணியளவில் அன்னாரின் இல்லத்திலிருந்து பாண்டியந்தாழ்வு புனித அன்னம்மாள் ஆலயத்தில் திருப்பலிக்குப்பின் யாழ். புனித மரியாள் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

(C-5273)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1986-ம் ஆண்டு அக்டோபர்மாதம் 18-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a News Paper at the General Post Office Sri Lanka under num er B/1003/81 Eelanadu P O. Box 49. Telegram Eelanadu Telephone: 22389—24126